சர்வதேசம் எங்கும் ஒரே நேரத்தில் விநியோகமாகும் ஒரே ஒரு இலவசப் பத்திரிகை

# தமிழினி

THAMILINI

ஜனவரி 1-5, 2014 | ஆண்டு 20 | இதழ் 1

## எச்சரிக்கை

முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்களின் அமெரிக்க விஜயத்தின் போது அவமதிக்கப்பட்ட செயலுக்கு அலட்டிக் கொள்ளாதவர்கள் இன்று ஒரு துணைத் தூதுவருக்காக துடிப்பது ஏன்? நிலக்கரி ஊழல் வழக்கில் பைல்களை காணவில்லை என்று வழக்கைத் திசை திருப்பியவர்கள் டிசம்பரில் கைது செய்யப்பட்ட தேவயாணிக்கு ஆகஸ்ட் மாதமே ஐ.நா வில் பதவி வழங்கி விட்டதாக புது பைல் போட்டது சந்தேகத்தை கிளப்புகிறது.

வல்லரசு நாடொன்றின் தான் தோன்றித்தனமான செயற்பாடுகள் உலக நாடுகள் மத்தியில் இந்தியாவை தலை குனியவே வைக்கும்.

*ஆசிரியர்*

# பிரித்தானியாவில் புத்தாண்டு தினத்தில் புயல் - வெள்ளம்

## மூவர் பலி 300 வீடுகள் மின்சாரம் இன்றி தவிப்பு



2014 ம் ஆண்டு பிறந்த தருணத்தில் பிரித்தானியாவில் வீசிய புயல் காற்று காரமாக மூவர் பலியானதுடன் 300 வீடகளில் மின்சாரம் இன்றி தவித்தனர்.

பிரித்தானியாவின் பல பகுதிகளை மோசமான மழையுமட காற்றும் தாக்கியது. புத்தாண்டிற்காய் நீந்தச் சென்ற 27 வயது இளைஞர் காணாமல் போயுள்ளார்.

30 வயதுள்ள பெண் ஒருவர் பிரயாணம் செய்த கார் லொறியுடன் மோதியதில் இறந்துள்ளார்.

புயலுடன் வெள்ளம் பிரித்தானியாவை மேலும் தாக்கும் என வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## கனேடிய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் இலங்கை விஜயம்



கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் செல்வி ராதிகா சிற்சபேசன் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளில் போரினால் பாதிப்பிற்குள்ளான தமிழ் மக்களை நேரில் சந்தித்தார்.

இலங்கை அரசு இவர் மீது எச்சரிக்கை விடுத்ததாக கூறப்பட்ட செய்திகளில் உண்மை இல்லை என்று அறியப்படுகிறது.

## அறிவித்தல்

ஜனவரி 2014 முதல் மளிகைக் கடைகளில் "தமிழினி"10 பென்ஸிற்கு பெற்றுக் கொள்ளலாம். ஒரு சிலர் பல இதழ்களை எடுத்துச் செல்வதால், பலருக்குப் பத்திரிகை கிடைப்பதில்லை என்ற தொடர்ச்சியான புகார் காரணமாகவே இந்த அதிரடி முடிவை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆலயங்கள், சமூக ஸ்தாபனங்கள், உணவகங்கள் ஏனைய பொது இடங்களில் "தமிழினி" இலவசமாகவே கிடைக்கும் அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்

*நிர்வாகி*

## வாழ்த்துக்கள்!

'தமிழினி' வாசகர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் புத்தாண்டு, பொங்கல் நல்வாழ்த்துக்கள்

*ஆசிரியர்*




## மகிந்த விக்னேஸ்வரன் சந்திப்பு



ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கும் வட மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்ரவனிற்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இன்று இடம்பெற்றுள்ளது. வடமாகாண சபையின் நிர்வாக பிரச்சினைகள் தொடர்பில் முதலமைச்சர் விக்னேஸ்வரன், ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்ததுடன், வடமாகாண சபையின் எதிர்கால நிர்வாக செயற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடியதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சந்திப்பின் போது ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, அமைச்சரவை செயலாளர் சுமித் அபேசிங்க, நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பீ. ஜயசுந்தர ஆகியோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் கலந்து கொண்டனர்.

"எதை இழந்தோம் என்பது முக்கியமானாலும் இழக்காமல் இருப்பதை காத்தல் அதைவிட முக்கியம்"

## பேனா முனையில்....

# அழுகையும் அவலமும் மாறப் போவதில்லை

2013ல் இலங்கையில் வடமாகாணத் தமிழர்களுக்கு அரசியலில் ஒரு சிறு ஒளிக்கீற்று வீசியது போலத் தென்பட்டது. ஆனால் அது நீர்க்குமிழி போல நிரந்தரமில்லாமல் போய்விடும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்கள் தமிழ் மக்கள் சோகத்தின் மத்தியில் இருந்தாலே தமது அரசியல் சொகுசு வாழ்வை சொர்க்க புரியாக்க முடியும் என்ற எண்ணத்திலிருந்து விடுபடுவதாக தெரியவில்லை.

முதலமைச்சர் இவர்களது வழிநடாத்தல்களால் வழி தடுமாறி நிற்பதனை காண முடிகின்றது. பிரதமர் நடாத்திய விருந்துபசாரத்தில் ஜனாதிபதியை கட்டி அணைக்காத குறையாக சம்பந்தனும், சிரிப்புடன் சுமந்திரனும் போஸ் கொடுத்த காட்சிகள் வெளிவந்திருந்தன.

ஜனாதிபதியின் அண்மைய அழைப்பைக் கூட சாட்டுக்கள் சொல்லி உதாசீனம் செய்து விட்டு தாங்கள் மட்டும் நட்புரிமை பாராட்டுகிறார்கள்.

மாமியார்-மருமகள் மனப்போக்கு எப்பொழுது முடிவுக்கு வருகிறதோ அப்போது தான் இலங்கைத் தமிழர்கள் நிம்மதியாக வாழ முடியும்.

அதுவரை ஆண்டுகள் புதிதாகப் பிறக்குமே தவிர அழுகையும் அவலமும் மாறப் போவதில்லை.


## தமிழினி THAMILINI
1-1-2014

பிரதம ஆசிரியர்
**தமிழினி குலேந்திரன்**

துணை ஆசிரியர்
**திரு.சிவநித்திலன்**

ஆசிரியர் குழு
**திரு. ஔ. குலேந்திரன்**
**திரு.கந்தசாமி மனோகரன்**
**திரு. எஸ்.கே.குணா**
**திரு.பீற்றர் ஜேசுதாஸ்**
**திரு.ஸ்ரீபதி சிவனடியான்**

நிர்வாகி
**திருமதி சறோஜினிதேவி குலேந்திரன்**

கௌரவ ஆலோசகர்கள்
**பேராசிரியர் கோபன் மகாதேவா**
**கலாநிதி பொன் பாலசுந்தரம்**

சட்ட ஆலோசகர்
**பாரிஸ்டர் எஸ்.ஜே. ஜோசப்**

ஆன்மீகப் பகுதி
**திரு.செ.யோகராசா**

செய்தி தொடர்பு
**திருமலை பாலா**
**வல்வைத் தேவன்**
**திருமதி. டில்லிராணி தெய்வேந்திரராஜா**

விளம்பரம்: **ஸ்ரீ**

வடிவமைப்பு
**சத்யன் லே-அவுட்**
**+91 95513 95516**
**www.satyanlayout.com**

கணினி அச்சுக்கோப்பு
**திருமதி றெஜினா நெல்சன்**

தகவல் தொழில்நுட்ப உதவி
**செல்வி. ஜனனி சிவாஜி**

அலுவலக முகவரி
**THAMILINI NEWS PAPER**
**90,HIGH STREET, COLLIERS WOOD**
**LONDON SW19 2BT**
**தொலைபேசி 044- 2086824494**
**தொலைநகல் 044- 2085428666**
மின்னஞ்சல்: **tkpublish@yahoo.co.uk**

"Thamilini" Registered under News Paper Libel & Registration Act 1881 (Newspaper Number N5881), and published by Global Tamil Media Ltd at Sharman & Company Ltd Peterborough Cambs PE1 5TD on 01.01.2014. Edited and Published Mr Vallipuram Kulendran.



## IMPORTANT INFORMATION - UK IMMIGRATION

**UK IMMIGRATION RULES HAVE CHANGED**

**UKBA & CAPITA** Are chasing to remove illegal immigrants. You may be one of them! **Hurry** before you are picked! **No time to waste!**

**CALL US TO BOOK AN APPOINTMENT TO REGULARISE YOUR STAY AND AVOID REMOVAL: 020 8542 5222 • 020 8682 4494 • 07769 186 592**

kilc_work@yahoo.co.uk Kulendran Immigration Law Chambers 90 High Street, Colliers Wood, SW 19 2BT


## உளறல்கள் உளறல்கள்உளறல்கள்

# உளறல்கள்

## உளறல்கள் உளறல்கள் உளறல்கள்



**முன்னாள் நீதிபதி கங்குலி**

நான் டில்லியில் இருந்த போது அவளும் டில்லியில் இருந்தாள். என்னிடம் வரவேண்டும் என்று கட்டாயப்படுத்தவில்லை. என்னுடன் விருந்துண்ட பின் கிளம்பி விட சுதந்திரம் உண்டு. சங்கடமாக இருந்திருந்தால் அங்கிருந்து சென்றிருக்கலாம். சூழ்நிலைக்கு பலியாகியுள்ளேன்.



**ப. சிதம்பரம்**

இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தில் நடைபெற்றது இனப் படுகொலை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. தமிழர்களுக்கு 13வது சரத்தைப் பெற்றுக் தராமல் ஓயமாட்டோம். ராஜீவ் காந்தியின் பெயரால் சூளுரைக்கின்றோம். இதனை நாங்கள் செய்தே தீருவோம்.



**மு. கருணாநிதி**

ஆதரவு கேட்டு தமிழகத்திலுள்ள பெரும்பாலான தலைவர்களுக்கும் நான் நேரடியாகக் கடிதம் எழுதினேன். அதில் ஆளும். கட்சியான அ.தி.மு.க வின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எச்சரிக்கை செய்யும் வகையில் தங்கள் கட்சியின் ஆதரவை வழங்க கேட்டிருந்தேன். இதற்கு பாரதிய ஜனதா கட்சியும் காங்கிரஸ் கட்சியும் மேலிடத்தைக் கலந்து கொண்டு முடிவு தெரிவிப்பதாகக் கடிதம் எழுதினர். கடைசி வரை ஆதரவைத் தெரிவிக்கவில்லை.



**ஷீலா தீக்ஷித்**

எனது கட்சியான காங்கிரஸ் போதுமான ஆதரவைத் தரவில்லை. அதுவே தோல்விக்கு காரணம். அரவிந் கேஜ்ரிவால் என்னை விட புத்திசாலி.



**அமைச்சர் டிலான் பெரேரா**

ரோஸி சேனநாயக்கா எம். பியும் (ஐ.தே.க) உபேக்கா சுவர்ணமாலி எம். பியும் (அரசாங்க கட்சி)பேசும் போது பெண்களுக்கு 30 சதவீத அரசியல் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்றனர். எனது அபிப்பிராயம் என்னவென்றில் இலங்கை சனத்தொகையில் 52 வீதமாக இருக்கின்ற பெண்களுக்கு அதேயளவு அரசியல் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.



**ஜோன் அமரதுங்க (ஐக்கிய தேசியக் கட்சி)**

நாட்டுக்குள் போதைப் பொருள் கொண்டு வர உதவியதாக பிரதமர் மீது குற்றஞ்சாட்டி அவரை பதவியில் இருந்து விலக வேண்டும் என்றும் கைது செய்ய வேண்டும் என்றும் பங்காளிக் கட்சியான ஜாதிக கெல உறுமய தெரிவித்திருப்பது நாட்டுக்கு நல்லதல்ல.



**பிரதமர் டி.எம். ஜயவர்த்தன**

சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படுவதில் எனக்கு உடன்பாடு கிடையாது அனைத்தையும் இலவசமாக வழங்கினால் இறுதியில் கோவணத்தையும் இலவசமாகக் கேட்கும் நிலை உருவாகும்.



**ரணில் விக்கிரமசிங்க (எதிர்க் கட்சி தலைவர்)**

அராஜக ஆட்சியைத் தொடரும் ராஜபக்சே குடும்பத்தினரின் ஆட்சியில் கடன் தொகை 4.8 ட்ரில்லியனாக அதிகரித்துள்ளது. இந்நிலை நீடித்தால் மலசல கூடம் போவதற்கும் விரைவில் வரி அறவிடப்படலாம்.



**அமைச்சர் பஷில்**

வெளிநாடுகளில் இருந்து வருபவர்களுக்கு எமது நாட்டில் அக்கறை இல்லை. இறுதிக் காலங்களில் அவர்கள் இந்தப் பிரச்சினையில் தலையிட்டிருக்கலாம். சில நாடுகளுக்கு தமது எதிரியான பிரபாகரனை எங்களூடாக கொலை செய்வதற்கான தேவை இருந்தது அதனை செய்வதை விட மக்களுக்காக சேவை செய்ய அவர்கள் முன்வரவில்லை. இப்போது முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள்.



**பிரதி அமைச்சர் கருணா**

ஜனாதிபதி யாரென்பதை எம்மால் தீர்மானிக்க முடியுமே தவிர தமிழ் முஸ்லீம் எவரும் ஜனாதிபதியாகி விட முடியாது. பலவீனமற்ற எதிர்க்கட்சி உள்ள காரணத்தால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வர முடியாது.



**சோனியா காந்தி:**

நாம் செய்யும் தவறுகளை ஊடகங்கள் எமக்கே சுட்டிக் காட்ட வேண்டும் நமது கட்சி ஆட்சி புரியாத மாநிலங்களில் நடைபெறும் ஊழல்களையும் ஊடகங்கள் எமக்கு அறியத்தர வேண்டும்



**லாலு பிரசாத்:**

புது டில்லி வாக்காளர்கள் தவறு செய்து விட்டார்கள் ஒரு மாதத்தில் தவறை உணர்ந்து கொள்வார்கள்.

# செய்தித் துளிகள் செய்தித் துளிகள் செய்தித் துளிகள் செய்தித் துளிகள்

- ஐரோப்பிய யூனியனில் எதிர்காலத்தில் இணைவதற்காக வரிசையில் நிற்கும் துருக்கி, மசிடோனியா, சேர்பியா, அல்பேனியா, பொஸ்னியா போன்ற நாடுகளுக்கு எதிராக தனது வீட்டோ வை பிரித்தானியா பாவிக்கும் என பிரதமர் கமரோன் எச்சரித்துள்ளார்.
- "Oxford Law School" என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டு 800 மாணவர்களுடன் இயங்கி வந்த தனியார் நிறுவனத்தின் பெயரை நீக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்நிறுவனத்தின் உரிமையாளர் முகமட் நீஸ் தனக்கு எவ்விதமான உள்நோக்கும் கிடையாது என்று குறிப்பிட்டுள்ளார்.
- ஆறுமாத கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் தொழிற்கட்சி அமைச்சர் டெனிஸ் மக்சேனுக்கு ஆதரவாக தொழிற்கட்சியின் பிரதித் தலைவர் கரியற் கமான் நீதிமன்றத்தில் நற்சாட்சி வழங்கியிருந்தார். 13,000 பவுண்களை முறையற்ற பத்திரங்களை சமர்ப்பித்து மோசடியாக பாராளுமன்ற செலவினங்களுக்காக இவர் பெற்றிருந்ததார் என்பது குறிப்பிடத்தக்கது.
- ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு Typhoon என்ற போர் விமானத்தை செய்வதற்காக பிரித்தானிய பிரதமர் எடுத்த நடவடிக்கைகள் தோல்வியில் முடிவடைந்துள்ளது. இந்த விற்பனையின் முன்னோடியாக மகாராணியாரின் விஜயம், பிரதமரின் இரு அரச பயணங்கள், ஜனவரி முதலாம் திகதியிலிருந்து பிரித்தானியாவிற்கு வரும் ஐக்கிய ராச்சிய மக்களுக்கான விசா விதிவிலக்கு போன்றவை கூட பயனளிக்கவில்லை.
- வாகன நிறுத்தங்கள் தொடர்பான தண்டங்களால் 2012-2013 ம் ஆண்டிற்கான உள்ளராட்சி சபைகளின் வரவு 594 மில்லியன் பவுண்ஸ்களாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை விட வாகன உரிமையாளர்கள் ஐந்து சதவீதம் கூடுதலான வரிகளை செலுத்தியுள்ளனர்.
- Marks & Spencer- ல் பணியாற்றும் முஸ்லீம் பணியாளர்கள் மதுபானம் மற்றும் பன்றிவகை உணவுகளை விற்பனை செய்ய மறுப்பதற்கு உரிமை வழங்கியுள்ளமை. வாடிக்கையாளர்களின் கோபத்தை உருவாக்கியுள்ளது. செயன்ஸ் பெறி இந்த விதிவலக்கை அமுல்படுத்தவில்லை.
- சாரதி ஓட்டும் லிமோ வண்டி அல்ல சாதாரண துவிச்சக்கர வண்டியே எனக்கு தேவை என்று அமைச்சர் நோர்மன் பேக்கரின் கோரிக்கையை அவரது உதவியாளர்கள் உதாசீனம் செய்துள்ளனர். உள்நாட்டு செயலகத்தில் இருந்து பாராளுமன்றம் சில மைல் தொலைவில் உள்ளதால் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்து இருந்தார்.
- தொழிற் சங்கங்களின் பிடியிலிருந்து எதிர்க்கட்சி தலைவர் எட் மிலிபான்ட் கட்சியை விடுவிக்காவிட்டால் எதிர்வரும் தேர்தலில் தோல்வியைத் தழுவ வேண்டியேற்படும் என்று மண்டெல்சன் பிரபு எச்சரித்துள்ளார்.
- UKIP கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் இடையே சில தொகுதி உடன்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கட்சியிலிருந்து விலகியுள்ள கோட்பிறே புளும் கூறியுள்ளார்.
- BBC மேலாளர்கள் பிழைத்துப் போன ஒரு திட்டத்திற்காக 18,000 பவுண்ட்ஸ் போனஸ் வழங்கப்பட்டுள்ளதாக தகவலறியும் சட்டத்தின் மூலம் கிடைத்த செய்தி தெரிவிக்கின்றது. நூறு மில்லியன் பவுண்ட்ஸ் வீணாகி விட்ட இந்தத் திட்டத்திற்கான அறிக்கையை தயாரிக்க 263,000 பவுண்ட்ஸ்கள் செலவானது. இது பொதுமக்களின் பிபிஸி லைசென்ஸ் பணமாகும்.
- நீண்ட கால விடுமுறைகளும், குறைந்த நேர வேலை நேரங்களும் என அனுபவிக்கும் பிரித்தானிய ஆசிரியர்கள் இனி 51 வாரங்கள் வேலையும் மாலை 6 மணி வரை வேலையும் செய்ய கல்விச் செயலாளர் சமர்ப்பித்துள்ள மீளாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ஐரோப்பிய இராணுவ அமைப்பிற்கு பிரித்தானிய பிரதமர் தனது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார். இந்தத திட்டதிற்கு பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்பெயின், போலந்து, இத்தாலி ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.
- பர்மிங்காம், சற்றன் பகுதிகளில் மருத்துவ மனை மேலாளர்கள் சத்திரசிக்சை நிபுணர் ஒருவர் விடுத்த தவறுகளை திருத்திக் கொள்ளாமல் பூசி மெழுகிய மேலாளர்களால் 4000 க்கு மேற்பட்ட மார்பகப் புற்றுநோய்க்கான சத்திர சிகிச்சை செய்து கொண்ட பெண் நோயாளர்கள் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
- ஐக்கிய ராச்சியத்தில் இன்று பிறக்கின்ற பத்துக் குழந்தைகளில் ஒன்பது பிறநாட்டு பெற்றோர்க்கு பிறக்கின்றன என்று வேலை ஓய்வுதியத்திற்கான செயலர் இயன் டங்கன் சிமித் தெரிவித்துள்ளார்.
- 1952 ல் குற்றவாளியாக தண்டனை விதிக்கப்ட்ட அலென் ரூறில் என்ற போர்க் காலத்தில் நாட்டைக் காப்பாற்றியவருக்கு பிரித்தானிய மகாராணியார் மன்னிப்பு வழங்கியுள்ளார். இவ்வாறு அரச மன்னிப்பு (Royal Pardon) வழங்கப்படுவது மிகவும் அரிதாகும்.
- பிள்ளைகளின் மனங்களை நஞ்சூட்டும் பெற்றோரை விமர்சித்த நீதிபதி திருமதி பார்க்கர் தனது 15 வயது மகளை தனது தந்தைக்கு எதிராக மனமாற்றிய தாய் பற்றி சமூக சேவையும் நியமிக்கப்பட்ட பாதுகாவலரும் கவனிக்கத் தவறிவிட்டதாக விசனம் தெரிவித்தார்.

## பிறந்தநாள் வாழ்த்து

திருக்குமரன் தமிழினி தம்பதிகளின் செல்வப் புதல்வி சந்தியா தனது 3வது பிறந்த நாளை கனடாவில் 19.01.2014 ல் வெகுவிமர்சையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அண்ணா சந்தோஷ், மற்றும் கனடா தாத்தா, அப்பம்மா, லண்டன் புட்டி, தாத்தா, அம்மம்மா, மற்றும் சின்ன் தாத்தா, சின்ன அம்மம்மா, மாமா, சித்தி, கனடா மாமா, மாமி, மைத்துனிமார்கள் மற்றும் உற்றார் உறவினர்கள் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.



# அதிரடிச் செய்திகள்

- டெல்லியில் சாராயக் கும்பலால் கொலை செய்ப்பட்ட போலீஸ் குடும்பத்திற்கு 1 கோடி ரூபா நிதி வழங்க முதல்வர் அரவிந்த் ஜெஜ்ரிவால் அறிவிப்பு.
- லோக் சபா தேர்தலுக்கு முன்னர் பிரதமர் வேட்பாளர் யார் என்பதனைக் காங்கிரஸ் கட்சி அறிவிக்க வேண்டும் என்று நிதி அமைச்சர் ப. சிதம்பரம் கேட்டுள்ளார்.
- சீன அதிபர் ஸி ஜின்பிங், இவர் பெய்கிங் நகரில் உள்ள உணவகத்தை ஆய்வு செய்யச் சென்றார். அப்போது பொது மக்களுடன் வரிசையில் நின்று உணவு வாங்கிச் சாப்பிட்டார்.
- சவுதி அரேபிய இளவரசருக்கு மரண தண்டனை வழங்கப்படவுள்ளது. குடிமகன் ஒருவரை கொலை செய்த வழக்கில் கொலையுண்டவரின் பெற்றோர் நஸ்ட ஈட்டுப் பணத்தை வாங்க மறுத்ததின் காரணத்தால் இவ் மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ளது.
- ஈராக் நாட்டின் சன்னி பிரிவைச் சார்ந்த அகமத் அல் ஆல்வனியை விடுவிக்க கோரி 44 பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர். அத்துடன் இராணுவத்தையும் மீளப் பெறுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்
- அமெரிக்காவில் கைது செய்யப்பட்ட இந்திய துணைத்தூதுவர் தேவயாணியின் வழக்கை மீளப் பெறப் போவதில்லை என்று அமெரிக்கா திட்ட வட்டமாக அறிவித்துள்ளது.
- சீன மக்கள் குடியரசு என்ற அரசியல் கட்சியைத் தோற்றுவித்த சீனாவின் தந்தை மா சே துங்கின் 120வது பிறந்த நாளில் 50 கிலோ தங்கத்தில் அவரது சிலை திறக்கப்பட்டுள்ளது.



தமிழ் மக்களுக்கு
ஓர் மகிழ்வான செய்தி!

BARRISTER S.J. JOSEPH
பாரிஸ்டர் செ.யோ. யோசேப்

நேரடியாக உங்கள் வழக்குகளை ஆராய்ந்து சொலிசிற்றர் இல்லாமலே நீதிமன்றத்தில் ஆஜராக உரிமை பெற்றுள்ளார். இதுதவிர, Home Office விண்ணப்பங்கள். உயர்நீதிமன்றத்தில் இடைக்காலத் தடைக்கான உத்தரவு பெறல் போன்ற சகலவற்றுக்கும்....

CHAMBERS OF BARRISTER JOSEPH
39, HERMITAGE ROAD, LONDON N4 1LU 020 8809 3083, 07831 594 270

தென் லண்டனில் 90, HIGH STREET
COLLIERS WOOD LONDON SW19 2BT

# இதுவரை நூல் வெளியீடு




(நமது நிருபர்)

கனடா உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர் ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்களின் ஆசிரிய தலையங்களின் தொகுப்பு நூல் *29.12.2013* ல் லண்டனில் வெளியிடப்பட்டது.

பேராசிரியர் கோபன் மகாதேவா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் இலக்கியவாதிகள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், வானொலி அறிவிப்பாளர்கள் என பல்வகை அறிஞர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவை சிறிபதி சிவனடியானின் இரங்கும் இல்லமும், தமிழினி பத்திரிகையும் ஒழுங்கு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

நூல் அறிமுக உரையை IBS வானொலி பிரதம அறிவிப்பாளர் திரு. S.K. குணா வழங்கினார். ஆய்வுரையை திரு. கந்தசாமி மனோகரன், திரு முல்லை அமுதன் ஆகியோர் வழங்கினர். வெளியீட்டுரையை பிரபல சிறுகதை எழுத்தாளர் திரு. இரா உதயணன் வழங்க மதிப்புரையை தமிழினி ஆசிரியர் திரு. குலேந்திரன், கோவிலூர் செல்வராஜன் ஆகியோர் வழங்கினர். பிரபல வானொலி அறிவிப்பாளர் திரு. நடாமோகன் வாழ்த்துரை வழங்கினர். அஞ்சல் நாழிகை இதழ்களின் ஆசிரியர் திரு. மாலி உரையாற்ற திரு. சிறிபதி சிவனடியான் நன்றி தெரிவித்தார்.

திரு. முல்லை அமுதன் ஆற்றிய ஆய்வுரையின் ஒரு பகுதி:

நாற்பதுகளில் நமது நவீன கவிதை வடிவத்தினை மகாகவியின் நெம்புகோல் தொடக்கி வைத்தனவெனினும் 70ற் குப் பிறகான கவிஞர்கள் கொஞ்சம் முனைப்பாக எழுத்த தலைப்பட்டனர். வடிவங்களில் சிதைவில்லாமலும் எந்தச் சேதாரமுமில்லாமலும் எழுத முனைந்தவர்கள் பலர். அவர்களுள் மலையன்பன், சத்தியன் என்று அறியப்படுகின்ற லோகேந்திரலிங்கமும் ஒருவர். ஈழத்து புதுக்கவிதையாளர்கள் 70 ற்குப் பிறகு தங்கள் கவிதை நூல்களை வெளியிடும் வாய்ப்புப் பெறுகையில் பலர் அடையாளம் காணப்பட்டனர்.

நூல்களை வெளியிட்டவர்கள் வரிசையில் மலையன்பனும் ஒருவர். தன் பதினேழாவது வயதில் சிரித்திரனில் எழுதிய அவரின் போலிகள் கவிதை நூல் மூலம் கவிஞராக மட்டுமல்ல ஒரு புதிய சிந்தனை வீச்சாளராகவும் இனம் காட்டினார். இன்னொரு படி மேலே போய் இவரின் ஆளுமைகளை வெளிக்கொணர்ந்த மாற்று. கீற்று சஞ்சிகைகளை நம்மை வந்தடைந்த போது பிரமிக்க வைத்தது. கல்லூரன் போன்றவர்களுடன் இணைந்து இலக்கியப் பணி ஆற்றியமை மேலும் செழுமைப்படுத்த உதவியது எனலாம். 80களில் இவரின் சஞ்சிகைகளின் வருகையின் போது புதுசு, அலை, சமர், மேகம், சிரித்திரன், மல்லிகை என பல சஞ்சிகைகள் வந்திருந்தாலும் இவரின் விரிவான சிந்தனை ஆற்றல் இன்னும் பேசு பொருளாகவே உள்ளது.

நாட்டின் சூழல் மாறுபாடு அடைய இவரும் கனடாவிற்கு புலம் பெயர்ந்தார். அங்கும் அவரை அகப்புறச் சூழல் இதழியலாளனாக பத்திரிகையாளனாக புதிய உத்வேகத்துடனும், சுதந்திரமாகவும் செயல்ப்பட வைத்தது. அந்த எண்ணம் உதயன் பத்திரிகையாக நம் முன் பரந்துபட்ட வாசகர்களை உள்வாங்கியபடி நடைபயில்கிறது. வேர்களை நாம் மறக்கவில்லை என்பதற்கு ஆதாரமாக உதயன் எனும் பெயர் நிலைத்துள்ளது. சூரியன் பத்திரிகை ஆசிரியராகவும் இருந்த அனுபவமே உதயனின் முதல்படி.

கனடாவில் ஈழநாடு, ஈழமுரசு, முழக்கம், செந்தாமரை, சுதந்திரன், தாய்வீடு, விளம்பரம், தூறல், முற்றம் எனப் பல பத்திரிகைகளுடன் இணைந்து வளர்ந்து இன்று விருட்சமாக நிற்கிறது.

இங்கு, பத்திரிகை ஆசிரியர் என்ற வகையில் தன் உள்ளக் கிடக்கையை ஆசிரியர் குறிப்பாக எழுதுவதும் காலப்போக்கில் அதுவே ஒரு இலக்கிய வகையாகவும் ஏற்றுக் கொள்கிற நிலைமைஏற்பட்டு விடுகிறது. அந் நாட்களில் தினகரன், வீரகேசரி, உதயன், சுடரொளி, ஈழநாடு ஆசிரியர் தலையங்கங்கள் பேர் பெற்றவை.

முதன் முதலில் ஈழநாடு ஆசிரியர் அமரர் சபாரத்தினம் அவர்கள் எழுதிய ஆசிரியத் தலையங்கம் பிரபல்யம் பெற அவற்றைத் தொகுத்து ஊரடங்கு வாழ்வு எனும் தொகுப்பு முதலில் வெளிவருகிறது. தினக்குரல் ஆசிரியரின் நுலும் வந்துள்ளதை அறிய முடிகிறது.

புலம் பெயர்ந்த பின் ஊர்க்குருவி, ஊடாடி, நடமாடி எனப் பெயர்களில் வெளி வந்த குறிப்புக்கள் நம்மை உலுக்கியுள்ளன.

அப்படியொரு சக்தி, வீரியம் அதற்கு உள்ளதை பின்னாளில் உணர்ந்தோம். உதயனிலும் வலுவான கட்டுரைகள் ஆசிரியர் குறிப்பாக வந்து உலுக்கி உள்ளதை மறுக்க முடியாது.

ஆளுமை மிக்க தன் எழுத்துக்களால் பல்வேறு வடிவங்களில், உள்ளடக்கத்தில் சமூக வாஞ்சையுடன், சமூக சீராக்கச் சிந்தனை கொண்டு எழுதப்பட்டுள்ள தொகுப்பு இன்று நமக்குக் கிடைத்துள்ளது.

3ம் ஆண்டு
நினைவஞ்சலி



07.01.2014
நடிகர் சிலோன் சின்னையா

அமரர் நடிகர் சிலோன் சின்னையா அவர்களின்
மூன்றாவது அமரத்துவ நாள் 07.01.2014.

அன்னாரை என்றென்றும் நினைவு கூருகிறோம்.

அன்பு மனைவி திருமதி சறோஜினி சின்னையா,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
02085742308 - 07738215183


Invest in EAST
INVEST IN EAST
INTERNATIONAL INVESTMENT PROMOTION FORUM OF EASTERN PROVINCE, SRI LANKA
வெளிநாட்டில் வாழும் முதலீட்டாளர்களுக்கு பெரும் வாய்ப்பு!
உள்ளூர் மக்களுக்கு.....
- வேலைவாய்ப்பு - சமூக வளர்ச்சி - பொருளாதார அபிவிருத்தி
I am pleased to inform you that we are organising International Investment Promotion Forum for Eastern Province with the objective of promoting Foreign Direct Investment (FDI) Seizing Employment and Wealth Creation Opportunities Of Eastern Sri Lanka.
The forum will be held on 17th January 2014 at Crystal Grand Ball Room, Taj Samudra Hotel, Colombo
Yours truly,
Z A Naseer Ahamed Eng. (MPC)
Minister of Agriculture, Animal Production and Development, Fisheries, Rural Industries Development & Tourism (E.P.C.)
விவசாய, கால்நடை அபிவிருத்தி, மீன்பிடி, கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி, உல்லாசப் பயணத்துறை அமைச்சு - கிழக்கு மாகாண சபை
INVESTMENT PROJECTS
RICE MILL, SEA BASS PRODUCTION, BANANA CULTIVATION, BROILER FARM, COMMERCIAL DAIRY, FARMING , COMMERCIAL GOAT BREEDER, FARM , DAIRY MILK PROCESSING,FRESH WATER PRAWN, PRODUCTION, MAIZE CULTIVATION, ORNAMENTAL FISH PRODUCTION, PAPAW CULTIVATION, PINE APPLE ECT...
முதலீட்டுத் திட்டங்கள்
அரிசி ஆலை, கடல் உணவு உற்பத்தி, வாழைப்பழ சாகுபடி, கோழிப் பண்ணை, கால்நடை வளர்ப்பு, நன்னீர் இறால் வளர்ப்பு, பப்பாளி சாகுபடி, அன்னாசி சாகுபடி இன்னும் பல...
உள்ளூர் - வெளிநாட்டு சந்தை வாய்ப்பு
அதிக இலாபம், மூலதனத்திற்கான உத்தரவாதம்,
Contact :-
Tel : 0094 112300496/2300488 Hot Line :0094 750445565 Fax: 0094 112303318
Email: info@investineast.lk , ministerepc@gmail.com
Website : www.investineast.lk , www.ep.gov.lk

# தொலைந்த தொடர்புகளைத் தொடுப்போம்

ஸ்ரீலங்காவில் நடைப்பெற்ற 30 வருடக் கொடிய போரினால் நாட்டை விட்டு லட்சக்கணக்கானவர்கள் வெளியேறினார்கள். இவர்களில் மிகக் குறைவானவர்களே தங்கள் தங்கள் பயணத்தை மிகவும் சுகமாகஇலகுவாகச் செய்தார்கள். மீதிப் பேர்களின் பயணத்தில் நடந்த கொடுமையான அனுபவங்கள் விபரிக்க முடியாதவை.

உதாரணமாக ஒரு நாட்டிலிருந்து இன்னுமொருநாட்டுக்கு மனிதர்களைக் கடத்துபவர்கள் எல்லோரும் தாங்கள் பணியை ஒழுங்காகச் செய்யவதில்லை. மேலதிகப் பெரும் பணத்தை திருட்டு முறையில் சம்பாதிப்பதற்க்காக திட்டமிடப்பட்ட அயோக்கியத்தனங்கள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை.

இளம் யுவதிகளை ஏமாற்றி துர்ப்பிரயோகம் செய்து அவர்களின் வாழ்க்கையை அழித்த சம்பவங்களும் உண்டு. மேலும் ரஸ்சியா, போலன்ட் போன்ற கிழக்குஜரோப்பிய நாடுகளில் அரசாங்க உத்தியோகத்தர்கள் தட்டிப் பறித்த லன்சம், யுவதிகளுக்குச் செய்த மிகக் கேவலமான கொடுமையான காரியங்கள் வேறு. இன்னும் ஏத்தனையோ வெவ்வேறு விதமான கொடுமைகள் தமிழ் கடத்தல்காரர்களால் அகதித் தமிழர்களுக்கு நடந்தன.

பணக்கஷ்டம், உடல்நலக்குறைவு, உறைவிடமின்மை போன்ற காரணங்களால் வாழ்க்கை வெறுத்து, திக்குத் திசை தெரியாமல் அலைந்து திரிந்தவர்கள் பலர்.

இன்று அகிலமெங்கும் நம்மவர்கள் பரந்து சீரும் சிறப்புமாக வாழ்ந்தாலும் சிலர் வாழ்க்கையை தொலைத்தவர்களாக இருக்கிறார்கள். இன்னும் சிலர் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அயலவர்கள், ஊராவர்கள் என பலரினது தொடர்புகளை முற்றாக இழந்து அவர்களுடன்தொடர்புகள் இன்றிஏங்க்கித் தவித்திது இன்னும் வாழ்கின்றார்கள் என்பதை அறிகின்றோம்.

இதனால் "தொலைந்த தொடர்புகளை தொடுப்பதற்க்கு "இப்படி ஒரு அட்டவணையை தயாரித்து அவர்களின் அன்பான உறவை இணைக்க முயற்சிக்கின்றோம்.

**உங்கள் பகுதிகளில் நடைபெறும் கலை, கலாச்சார சமூக நிகழ்வுகள் பற்றிய தகவல்கள், செய்திகள், படங்களை எமக்கு அனுப்பி உதவுங்கள்.**

**மின்னஞ்சல்:**
**tkpublish@yahoo.co.uk**

### உதாரணமாகப் பின்வரும் அட்டவணைப்படி நிரப்புங்கள்:

| | | |
|---|---|---|
| தேடுபவர்பெயர் | : | லோகேந்திரலிங்கம் |
| பிறந்த வருடம் | : | 1953 |
| தந்தைபெயர் | : | நாகாமணி |
| வாழ்ந்த இடங்கள் | : | திருநெல்வேலி, கொழும்பு |
| தற்போதய வாழ்விடம் | : | கனடா டொரொண்டோ |
| ஆரம்பப்பள்ளி | : | |
| கல்லூரி | : | |
| பல்கலைக்கழகம் | : | |
| வேலை செய்த நிறுவனம் | : | |
| இடம் | : | |
| தேடப்படுபவர் பெயர் | : | ஸ்ரீபதி கரம்பொன் காவலூர் |
| தந்தையின்பெயர் | : | சிவனடியான் |
| அண்ணளவு வயது | : | 60 |
| படித்த இடங்கள் | : | தெரியாது |
| வேறு தெரிந்த தரவுகள் | : | தெரியாது |

இப்பத்திரிகை, இணயத்தளம் மூலம்
தொலைந்த தொடர்புகளைத் தொடுப்போம்





# "உலகத் தமிழர்க்கு ஒரு தொலைக்காட்சி தீபம்"





இங்கிலாந்தில் இருந்து ஒளிபரப்பப்படும் தீபம் தொலைக்காட்சியின் புதிய நிர்வாகம் ஸ்ரீபாலசுந்தரம் அவர்களின் தலைமையில் கண்காணிப்பில் விருந்துபசார வைபவம் *19.12.2013* இல் LONDON - FELTHAM நகரில் உள்ள NAKSHATRA Banqueting Hall, Snakey lane, Feltham, TW13 7NA மண்டபத்தில் பார்வையாளர்கள், விளம்பரதாரர்கள், தீபம் ஊழியர்கள், ஆதரவாளர்கள் எனப் பலருடன் கொண்டாடப்பட்டது. 13 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்து தொடர்ந்தும் பல சிரமங்களின் மத்தியில் இடைவிடாது ஒளிபரப்பிக் கொண்டிருக்கும் நம்மவர் தீபம் தொலைக்காட்சிக்கு அறிவிப்பாளர் தினேஷ் அவர்கள் நிகழ்ச்சியை நடாத்திக்கொண்டும் அவர் பாடும் இனிய பாடலை விருந்தினர்கள் கேட்டும் மகிழ்ந்தார்கள்.

எமது இளம் சந்ததியினர் களின் கலையை வளர்ப்பதற்கும், அவர்களின் திறமையை உலகுக்கு வெளிக்கொணர் வதற்க்கும் ஒரு தலை சிறந்த ஊடகம் ஆக தீபம் தொலைக்காட்சி இருக்கிறது. தீபம் தொலைக் காட்சிநிலை நிறுத்தி உலகெங்கும் வாழும் தமிழர்களின் உள்ளத்தில் உவகை ஊட்ட உதவவேண்டும். உயர்ந்து ஓங்கி வளர நாம் ஒன்றினைந்து பாடுபட வேண்டும். தமிழர்கள் அனைவரும் சந்தாக்காரர் களாகி தீபத்துடன் சேர்ந்து நாமும் மகிழ்சியில் நிறைவு பெற வேண்டும்எனப் பலர் பேசியதைக் கேட்க்க முடிந்தது.

எந்தவித விழாவாக இருந்தாலும் மகிழ்ச்சியாக சகல வ்சதிகளுடனும் சிறப் பாகவும் சிக்கனமாகவும் நேர எல்லை யின்றிக்கொண்டாடி மகிழ்ந்திட நம்மவர் மண்டபம் NAKSHATRA குழுவினர் ஒத்துழைத் தார்கள்.

தீபம் தொலைக்காட்சியின் புதிய உரிமை யாளர் திரு. ஸ்ரீ பால சுந்தரம் அவர் கள் தனது வெள்ளை இதயத்துடன் (மக ளுடன்) யோடியாக இணைந்து பாடும் காதுக்கினிய கண்களுக்கு அழகான "கண்ணன் ஒரு கைக் குழந்தை" எனும் பாடல் சபையோரை ஆச்சரியத்தில் ஆழ் தியது. நோர்வேத்தாய்க்குப் பிறந்த இந்தச் செல்வியின் அற்புதமான உச்சரிப்பு, ராகம் போன்றவற்றைக் கேட்டும் பார்த்தும் மூக்கில் கைவைத்து ஆச்சரியப்பட்டார்கள். தீபத்தில் ஒளிபரப்பாகும் "சொக்குதே மனம்" நிகழ்சியைப் போன்று சபையோர் சொக்கிப் போய் இருந்தார்கள்.


**ACCESS TUTORS ACADEMY**

பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளின் தரமான கல்விக்காகவும் சிறந்த பெறுபேறுகளை பெறுவதற்காகவும் ஒரே கூரையின் கீழ் ஆரம்பிக்கப்படும் புதிய கல்வி நிறுவனம்

GCE (A/L) (ALL EXAM BOARDS IN UK)
GCE (O/L)
11+ TO YEAR 10

உங்கள் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யும் நோக்கில் LONDON மாநகரில் தமிழ் மாணவர்கள் செறிந்து வாழுகின்ற TOOTING / WIMBLEDON மற்றும் TOLWORTH / SURBITON ஆகிய இடங்களில் 2013/2014 புதிய கல்வி ஆண்டில் புரட்டாதி (SEPTEMBER) மாதம் இக்கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்படவுள்ளது. LONDON மாநகரில் பிரசித்தி பெற்ற தொடர்ந்து முன்னிலை வகிக்கும் ஆசிரியர்களால் சகல பாடங்களும் கற்பிக்கப்படும்.

ACCESS TUTORS ACADEMY
இரு இடங்களில்

| | |
|---|---|
| CHESSINGTON BUSINESS CENTRE | 272 MITCHAM ROAD |
| COX LANE | TOOTING |
| CHESSINGTON | LONDON |
| KT 9 1 SD | SW 17 9NT |

TEL : 0203 0200 035
EMAIL : info@accesstutors.co.uk

மேலதிக விபரங்களுக்கு

| UTHAYANAN | ASOGAN | THAS | YOGA |
|---|---|---|---|
| 07747794358 | 07968178698 | 07956317920 | 07956481569 |



**CHANCERY CS SOLICITORS**

2007 மார்ச் 07ம் திகதிக்கு முன்னர் அரசியலடைக்கலம் கோரி இதுவரை பதில் இல்லையா? எம்மை தொடர்பு கொள்ளுங்கள்!

இது தவிர................

We specialise in:

- Immigration Related Applications and Appeals
  - Asylum Claim & Human Rights
  - EEA Law & British Citizenship
  - Detention & Deportation and Judicial Review
- Family Matters
- Divorce and Adoption
- Employment Law
- Conveyancing & property
  - Commercial
  - Residential & Employment Law

1A, Landor Road London SW9 9RX

Tel No: 020 7737 6379
Fax No: 020 7274 0099



**IMPORTANT INFORMATION - UK IMMIGRATION**

UK IMMIGRATION RULES HAVE CHANGED


UKBA & CAPITA Are chasing to remove illegal immigrants. You may be one of them! Hurry before you are picked! No time to waste!

CALL US TO BOOK AN APPOINTMENT TO REGULARISE YOUR STAY AND AVOID REMOVAL: 020 8542 5222 • 020 8682 4494 • 07769 185 592

kilc_work@yahoo.co.uk Kulendran Immigration Law Chambers 90 High Street, Colliers Wood, SW 19 2BT

# செய்தியும் சிந்தனையும்

அபிமன்யு...



## செய்தி

"மறைந்த தென் ஆபிரிக்காவின் தலைவர் மண்டேலா விட்டுச் சென்ற உயர்ந்த விழுமியங்களான ஜனநாயகம், வேற்றுமையில் ஒற்றுமை, சுதந்திரம், மனித கௌரவம், ஆகியவற்றை நாம் பாதுகாப்பதும் பேணுவதும்தான் நாம் அவருக்குச் செலுத்தக்கூடிய உண்மையான மரியாதையாகும். அவர் அந்நாட்டு மக்கள் மீது மட்டுமல்லாமல் உலக மக்களின் மீதும் அழிக்க முடியாத முத்திரையை விட்டுச் செல்கிறார்"

*- ஸ்ரீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச*

"நெல்சன் மன்டேலா மக்களை அடக்குமுறைகளிலிருந்து விடுவித்த மாபெரும் தலைவர்களில் ஒருவராவர்"

*- தமிழர் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்*

## சிந்தனை

நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கையும், அவர் விட்டுச் சென்ற சொத்து (legacy) என்ன என்பதையும் சுருக்கமாக ஒரு முறை இரை மீட்டிப் பார்ப்போம்.

அவர் தென்னாபிரிக்க வெள்ளை இன அரசின் அடக்கு முறைகள், ஏதேச்சிகாரம், மனித, பொருளாதார உரிமை மறுப்புகள் ஆகியவற்றிலிருந்து தனது இனத்தைச் சேர்ந்து தென்னாபிரிக்க கருப்பு மக்கள் விடுதலை பெறவும் அவர்கள் கௌரவமான வாழ்வு வாழவும், தனது 26ம் வயதில் (1944ம் ஆண்டு) ஆபிரிக்க தேசிய காங்கிரசுடன் (African National Congress ANC) சேர்ந்து சாத்வீக வழிப் போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கினார். இன அடிப்படையில் கருப்பு மக்களைத் தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கிய தென்னாபிரிக்க வெள்ளை இன அரசு கருப்பு மக்கள் மீது அவிழ்த்து விடப்பட்ட கட்டற்ற வன்முறைகளை எதிர்கொள்ள ஆயதப்போராட்டந்தான் வழி என்ற நிலைமை ஏற்பட, அரசிற்கு எதிரான ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும் நடவடிக்கைகளில் பங்குபற்றினார்.

அந்தப் போராட்டம் நியாயமானது என்பதை உணர்ந்து கொண்ட வெள்ளை இனம் மற்றும் இந்திய வம்சாவழி மக்கள் ஆகிய சமூகத்தைச் சேர்ந்த தலைவர்கள், புத்திஜீவிகள் சிலரும் தென்னாபிரிக்க தேசிய காங்கிரசுடன் இணைந்து போராடினர்.

அவரது 38வது வயதில் (1956ம் ஆண்டு) அரசுக்கெதிரான நாச வேலைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு தென்னர்பிரிக்க அரசாங்கம் அவர் மீது வழக்குத் தொடர்ந்தது. அவர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப் படாமையினால் ஐந்து ஆண்டுகளின் பின்னர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

பின்னர், அவரது 44வது வயதில் (1962ம் ஆண்டு) தேசத்துரோகம் குற்றத்தில் கைதுசெய்யப்பட்டு கடூழிய ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டார்.

இருபத்தெட்டு ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த அவர் தனது 72வது வயதில் (1990ம் ஆண்டு) அப்பொழுது ஜனாதிபதிபதியாகப் பதவி வகித்த் வெள்ளை இனத்தைச் சேர்ந்த எவ்டபிள்யு டி கிளார்க் என்பவரின் அரசால் விடுதலை செய்யப்பட்டார்.

சிறைவாசம் முடிந்து அவர் வெளி வந்ததும் அவரை வரவேற்கத் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அவர் கூறியது - "பகைமைகளை மறந்து தென்னாபிரிக்க நாட்டின் அனைத்துச் சமூகங்களும் ஒற்றுமையாகவும் சுதந்திரமாகவும் வாழும் ஒரு வானவில் சமுதாயத்தை நாம் கட்டயெழுப்புவோம்".

1993ம் ஆண்டு அவருக்கும், எவ்டபிள்யு டி கிளார்க் அவர்களுக்கும் சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

அவரது சிறைவாச விடுதலையின் பின்னர் 1994ம் ஆண்டு முதன்முதலாக தென்னாபிரிக்க நாட்டு மக்கள் அனைவரும், இனபேதமின்ற ஆளுக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் நடைபெற்ற நாளவிய தேர்தலில் தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

ஜனாதிபதியாக ஒரு பதவிக்காலம் மட்டுமே வகித்தவர் தன் பதவிக்காலம் முடிந்ததும்-அடுத்த தேர்தலில் சந்தேகமின்றி அவர் வெற்றி பெறுவார் என்ற நிலைமையிருந்தும் - தன்னை முன்னிறுத்தாமல் 1999ம் ஆண்டு தன் பதவியைத் தானாகவே துறந்தார்.

ஆனாலும் தொடர்ந்து பல ஆ்ண்டுகளாக தான் நிறவிய பல பொது அறக்கட்டளைகளில் பங்காற்றி தன் வாழ்வின் இறுதிக் காலங்களைக் கழித்தார்.

ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படுவதன் முன்னர் வெளியில் இருந்து தன் மக்களின் விடுதலைக்கும் விமோசனத்திற்குமாக நேரடி அரசியலிலல் அவர் ஈடுபட்ட காலம் 18 ஆண்டுகள்.

அதற்காக அவர் சிறைகளில் வாழ்ந்த காலம் 28 ஆண்டுகள்.

நெல்சன் மண்டேலா ஒரு துணிச்சலான, வசீகரத்தன்மைகள் ஆழமான அறிவு கொண்ட — தனது வசதியான வாழ்க்கையும் சுதந்தித்தையும் தனது இனத்தின் சுதந்திரத்திற்காகவும் சுபீட்சத்திற்காகவும் அர்ப்பணித்துக் கொண்ட — ஒரு உன்னதமான தலைவர்.

மானசிகமாகவே, நாடும், நாட்டு மக்கள் அனைவரும், இனம், சமயம், சாதி பேதமில்லாமல் நல்ல மாற்றங்களைப் பெற வேண்டும் என்ற நோக்குடன் வாழ்த்த மானிடன்.

உலக மக்கள் அனைவரும் அவரது மறைவுக்கு இரங்கல்களும் அஞ்சலிகளும் செலுத்துமளவிற்கு வாழ்ந்த ஒரு உண்மையான சககால மாமனிதன்.

சுயநலம் மேவும் பதவி மோகம் கொண்ட வெற்றி அரசியல்வாதியாக அல்லாமல் ஒரு உன்னத அரசியல் ஞானியாக வாழ்ந்து காட்டியவர்.

நெல்சன் மண்டேலா எங்கே? —ஸ்ரீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவோ தமிழ தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனோ எங்கே?

உயர்ந்த விழுமியங்களான ஜனநாயகம், வேற்றுமையில் ஒற்றுமை சுதந்திரம் மனித கொளரவம் அரசியஞானியின் குணாதியங்கள் ஆகியவைகவை மேம்பட வாழ்ந்த நெல்சன் மண்டேலா எங்கே? —தனது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து அரசபடைகளை உபயோகித்து, மனித உரிமைகள், ஊடக, நீதித்துறை சுதந்திரம், ஜனநாயகம், ஆகியவற்றை மிதித்து நசுக்கி ஒரு சாதாரண மூக்றாம்தர அரசியால்வாதியாக கோலோச்சும் மகிந்த ராஜபக்சர் எங்கே?

ஒரு மனித வாழ்வின் சிறந்த பகுதியை சிறையில் கடூழியக் கைதியாக வாழந்தும், சிறை மீண்டதும் 'பழிக்குப் பழி' என்ற நிலைப்பாட்டை எடுக்காமல் நாட்டு மக்களின் மொத்த நலனுக்காக ஒரு வானவில் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம் என்று உண்மையாகவே வேற்றுமையில் ஒற்றமையை நடைமுறைப்படுத்திய நெல்சன் மண்டேலா எங்கே? — தனது இரண்டு பதவிக்காலத்திலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் பதவி வகிக்கும் பேறு கிடைத்தும், சக இனங்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு ஒரு நியாயமான தீர்வைத் தராது இழுத்தடித்துக் கொண்டும், இராணுவத்தின் அதிகளவு பிரசன்னம், கெடுபிடிகள், காணிப்பறிப்புகள், அடாவடிகள் ஆகியவற்றைத் தொடரவைத்தும், சிறுபான்மைச் சமூகங்களின் சமயவழிபாடு ஸ்தலங்கள் அழிப்புகளை நிறுத்தாதும் இனங்களுக்கிடேயான விரிசல்களையும் வேற்றுமைகளையும் விஸ்தரித்து வளர்க்கும் மகிந்த ராஜப்பக்ச எங்கே?

திரும்பவும் தேர்தலில் நின்றால் ஜெயிப்பது நிச்சயம் என்ற நிலையிருந்தும் தனது முதலாவது பதவிக்காலம் முடிந்தவுடன் தானாகவே அரசியலிருந்து ஒதுங்கியும், தொடர்ந்து தனது வயோதிகத்தையோ உடல் நிலையையோ கருத்தில் கொள்ளாமல் உலக மக்கள் நலன் சார்ந்த அறக்கட்டளைகளை உருவாக்கி மற்றைய உலகத் தலைவர்களுடன் தொடர்ந்து பணியாற்றிய நெல்சன் மண்டேலா எங்கே? — தனது ஜனாதிபதி பதவியைத் தக்க வைப்பதற்காக பதவிக்காலத்தை நீட்டியும், தனது குடும்பத்தைச் சேர்ந்தவர்களை அதிகாரத்தில் அமர்த்தியும், எண்ணிக்கை மறந்து போகுமளவிற்கு அண்டிப் பிழைப்பவர்களையும் சமூகவிரோதிகளையும் குண்டர்களையும் அமைச்சர்களாகவும், உதவி அமைசர்களாகவும் நியமித்து தன் பதவியை நீடிக்கும் மகிந்த ராஜபக்ச எங்கே?

சர்வதேச நாடுகள் அனைத்தும் பாராட்டும் நெல்சன் மண்டேலா எங்கே? — சர்வதேச நாடுகளினதும், மனித உரிமை அமைப்புகளினதும் கண்டனங்களைப் பெறும் மகிந்த ராஜபக்ச எங்கே?

தனது சுதந்திர வாழ்க்கையையும் குடும்ப வாழ்க்கையும் அர்ப்பணித்து சிறைக் கொடுமைகளை அனுபவித்த நெல்சன் மண்டேலா எங்கே? — என்றுமே சிறை செல்லாது மற்றவர்களைச் சிறைகளுக்கு அனுப்பி வைக்கும் கைங்கரியங்களைச் செய்து கொண்டு, தமது குடும்பத்தை வசதியாக சுகங்களை அனுபவித்து அரசியல் நடாத்தி தமிழினத்தின் தலைவர்களாக வலம் வரும் தமிழ் தேசிய கூட்டணியின் தலைவர் இரா. சம்பந்தனும், அக் கூட்டணியைச் சேர்ந்த சகாக்களும் எங்கே?

"பகைவனுக்கும் அருள்வாய் நன்நெஞ்சே" என்ற பாரதியாரின் வரிகளுக்கேற்ப கடந்தவையைக் கருத்தில் கொள்ளாது இன ஒற்றுமையை வேண்டி நின்ற நெல்சன மண்டேலா எங்கே? - தாம் பாதிக்கப்படாமலே, பாதிக்கப்பட்டவர்களை முன்வைத்து பழிக்குப் பழி மனப்பான்மையை மேலோங்கச் செய்து, சுலப வாக்குகள் சேகரிக்கும் மகிந்த ராஜபக்ச இரா சம்பந்தன், சகாக்கள் எங்கே?

"எனது மக்களின் சுதந்திரமில்லாமல் என் சுதந்திரம் வேண்டேன்" என்ற நெல்சன் மண்டேலா எங்கே? - சிங்களப் பேரினவாதிகளுக்குச் சமமாக தமிழ்க் குறுந்தேசியவாத அரசியல் மூலம்

**IMPORTANT INFORMATION - UK IMMIGRATION**

**UK IMMIGRATION RULES HAVE CHANGED**

UKBA & CAPITA Are chasing to remove illegal immigrants. You may be one of them! Hurry before you are picked! No time to waste!

CALL US TO BOOK AN APPOINTMENT TO REGULARISE YOUR STAY AND AVOID REMOVAL: 020 8542 5222 • 020 8682 4494 • 07769 185 592

kilc_work@yahoo.co.uk Kulendran Immigration Law Chambers 90 High Street, Colliers Wood, SW 19 2BT

# ஆஸ்திரேலியாவில் இந்திய மாணவன் மீது தாக்குதல்



ஆஸ்திரோலியாவின் மெல்போர்ன் நகரில் படித்துவந்த இந்திய மாணவர் ஒருவரை, பெண் உள்பட 9 பேர் கொண்ட கும்பல் தாக்கியதில் பலத்த காயமடைந்த அவர் கோமா நிலைக்குச் சென்றுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மன்வீந்தர்சிங் என்ற அந்த மாணவர் தனது இரு நண்பர்களுடன் அங்குள்ள பிர்ராரங் பூங்காவின் நடைபாதையில் நின்றிருந்தபோது ஆப்ரிக்கர்போல் தோற்றம் கொண்ட 8 பேர் உள்பட ஒரு பெண்ணும் சேர்ந்து கடுமையாக தாக்கியுள்ளனர்.

சிங்கின் முகத்தில் குத்தி கீழே தள்ளி அருகிலிருந்த கட்டையை எடுத்து அவரை சரமாரியாக தாக்கி அவரிடமிருந்த செல்போன் மற்றும் பர்சை திருடிச் சென்று விட்டனர். இத்தாக்குதலில் படுகாயமடைந்த அவர் அங்குள்ள ஆல்பிரட் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள அவர் கோமா நிலையில் உள்ளதாகவும், ஆனால், உயிருக்கு எவ்வித ஆபத்தும் இல்லை என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

## தொலைபேசியில் பேசித் தொலைக்காதீர்கள்!



**அன்பான வாசகர்களே!**

தமிழினி தொடர்பான உங்கள் கருத்துக்களை தபாலில் அல்லது மின்னஞ்சலில் அனுப்பி வையுங்கள். தொலைபேசியில் பேசி நீங்கள் எமது நேரத்தை வீணடிப்பது மட்டுமல்ல அதனை எம்மால் பிரசுரிக்க முடியாது என்பதனையும் வருத்தத்துடன் தெரிவிக்க விரும்புகின்றோம்.

நிர்வாகி

8ம் பக்கத் தொடர்ச்சி

தம் பதவிகளையும் உரிமைகளையும் தக்க வைத்துக் கொண்டு வாழும் இரா சம்பந்தனும் அவரது சாகாக்களும், இதர தமிழ்த் தலைவர்களும் எங்கே?

சகோதரப் படுகொலைகளைக் கண்டித்து நெல்சன் மண்டேலா எங்கே? - சகோதரப் படுகொலைகளை நடாத்தியவர்களைக் கண்டிக்காவில் வெள்ளை இன அரசிற்கு எதிரான பேராட்டமெனினும், அங்கு வாழ்ந்த வெள்ளை இனத்தைச் சேர்ந்தவர்கள் சிலரினதும், பிரிட்டன் போன்ற வெளிநாடுகளில் வாழும் வெள்ளை இனத்தைச் சேர்ந்தவர்களின் அபரிமிதமான ஆதரவைப் பெற்று அவரது இலட்சியத்திற்கு உரம் ஊட்டி வளர்ச்சியடையச் செய்து விருட்சமாக்கிய நெல்சன் மண்டேலா எங்கே? - அறம் சாராத அரசியல் செயல்பாடுகளை மேற்கொண்டு உலக நாடுகளால் பயங்கரவாத அமைப்பு என்று பிரகடனப்படுத்தப்பட்டு தடை செய்யப்பட்ட அமைப்பிற்கு வக்காலத்து வாங்கி அரசியலை மேற்கொண்ட இரா சம்பந்தனும் சகாக்களும் எங்கே?

தென்னாபிரிக்க அரசின் அடக்கு முறைகளிலிருந்து தன் இனத்தின் மக்களை விடுவித்த தலைவன் நெல்சன் மண்டேலா எங்கே? - தமிழ் மக்களின் மீளாத் துயரங்களும் இன்னல்களும் அவலங்களுந்தான் பலாபலன்கள் என்ற இப்பொழு தமிழினத்தின் தலைவர்களாக வலம் வந்து கொண்டிருப்பவர்களும் எங்கே?

தன்னையே அர்ப்பணித்து தென்னாபிரிக்க மக்களின் அடிமை விலங்கை உடைத்தெறிந்த நெல்சன் மன்டேலா எங்கே? ஏகப்பிரதிநிதிகள் கோரிக்கைக்கு முண்டு கொடுத்து தம் சுகபோகங்களை வளர்ந்து தமிழனத்தின் அடிமை விலங்கைப் பலமாக்கிய இரா சம்பந்தனும், தமிழ்த் தலைவர்களாகப் பவனி வருபவர்களும் எங்கே?

இவர்களது நாக்கு நெல்சன் மண்டேலா பெருமை பேசுகிறது! -ஆனால் இவர்களது உள்ளமும் செயலுமோ அவரின் உயர்ந்த விழுமியங்களுக்கு நேர் எதிரானவை!

இவர்கள் தம் இறப்பிற்குப் பின் விட்டுச் சொத்துத்தான் என்ன? - தம் குடும்பத்தினருக்கு விட்டுச் செல்லும் பணம், மனைகள், நிலபுலன்களை விட!

நெல்சன் மண்டேலாவை நாட்டு மக்கள் தந்தை ஸ்தானத்தில் வைத்து அவரின் இறப்பிற்குப் பின்னரும் நினைவு கொள்கிறார்கள் -போற்றுகிறார்கள்

இவர்களின் இறப்பிற்குப் பின் மக்கள் இவர்களை மறந்து விடுவார்கள். தூற்றுவார்கள்.

தமது வார்த்தைகளுக்கு விசுவாசமாக நெல்சன் மண்டேலா வாழ்ந்து காட்டிய அரசியல் நெறிமுறைகளைக் கடைப் பிடிப்பானார்களானால், அவற்றை தம் அரசியல் வாழ்வில் செயற்படுத்துவார்களானால், அதுவே இவர்கள் அவருக்கு அளிக்கும் அதியுயர்ந்த மரியாதையாகும்!

— அதுவே வருங்காலச் சந்ததி உட்பட மக்கள் அனைவரினதும் மனமார்ந்த பாராட்டுகளையும் போற்றுதல்களையும் இவர்கள் பெறுவதற்கு ஒரே வழியாகும்!


# தமிழினி

பத்திரிகையின்

## 20வது ஆண்டு விழா



## குழந்தைகள், சிறுவர்கள் தங்கப் பதக்கங்கள் வெல்வதற்கான ஆடல், பாடல் போட்டிகள்

சித்திரை மாதம் 12ம் நாள் சனிக்கிழமை நடைபெறவுள்ள தமிழினி செய்திப் பத்திரிகையின் 20 வது ஆண்டு விழாவில் குழந்தைகள் சிறுவர்களுக்கான ஆடல் பாடல் போட்டிகள் இடம் பெறவுள்ளன. 11 வயதிற்கு குறைந்தவர்கள், 16 வயதிற்கு குறைந்தவர்கள் என இரு பிரிவுகளாகப் போட்டிகள் நடைபெறும் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று பரிசுகளைப் பெறுபவர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலம் பதக்கங்கள், ஏனைய போட்டியாளர்களுக்கு விருதுகள் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளன. **போட்டி முடிவு திகதி 28,02,2014**

## நீங்கள் விரும்பிய பாடல்களையும், ஆடல்களையும் தெரிவு செய்யலாம்

உங்கள் பெயர் - பிறந்த திகதி - முகவரி - பெற்றோர் விபரம் - பயிலும் பாடசாலை - கலந்து கொள்ள விரும்பும் போட்டி - உங்கள் பெற்றோரின் தொலைபேசி / மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றோடு உங்கள் விண்ணப்பங்களை எமக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

உங்கள் விண்ணப்பங்களை tkpublish@yahoo.com அல்லது 02085428666 என்ற தொலை நகல் இலக்கத்திற்கு அல்லது THAMILINI NEWS PAPER, 90 HIGH STREET, COLLIERS WOOD, LONDON SW19 2BT என்ற முகவரியில் நேரடியாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

முதற்கட்டப் போட்டியில் ஒவ்வொரு பிரிவில் இருந்தும் ஆறு பேர் தெரிவு செய்யப்படுவர்.
இறுதிக் கட்டப் போட்டிக்கான தெரிவு பார்வையாளர்களின் வாக்குக்களால் தீர்மானிக்கப்படும்

**12.04.14 அன்று இரவு விழாவில் இரவுப் போசனமும், நடனமும் இடம் பெறும். இதற்கான நுழைவுச் சீட்டுக்கள் குடும்பம் £ 35.00 தனி நபர் £ 15.00 ஆகும்.**

மேலதிகமாகச் சேரும் பணம் 'சமம்' அமைப்பு மூலம் வன்னியில் உள்ள குழந்தைகளின் மருத்துவச் செலவிற்காக வடமாகான சுகாதார அமைச்சர் மூலம் வழங்கப்படும்.

## கழுதையா பாம்பா?

பிரித்தானியாவை சேர்ந்த ஐம்பது வயதான பெயர் குறிப்பிடப்படாத வர்த்தகர் ஒருவர் கேர்மன் நகரில் வைத்து ஈரானிய காவல்துறையினரால் கைது செய்யப் பட்டு நீதிமன்றத்தில் ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்துள்ளார் என ஈரானிய அதிகாரிகள் கூறுகின்றனர். அவர் தான் 6 உளவுப் பிரிவுக்காக கேர்மன் நகரில் பணிபுரிந்ததாகவும் பல தடவைகள் உள் நாட்டு வெளிநாட்டுத் தகவல்களை பிரித்தானிய உளவுப் பிரிவுடன் அந்தரங்கமாகப் பரிமாறியதாகவும் ஒப்புக் கொண்டுள்ளார் என ஈரானிய அதிகாரிகள் கூறுகின்றனர்.இவ்விரு நாடுகளுக்கும் இடையில் இறுக்கமான உறவு நிலவும் தற்போதைய கால கட்டத்தில் இச் செய்தி ஈரானியரால் வெளியிடப் பட்டுள்ளது. பிரித்தானிய வெளி விவகார அலுவலகத்தினால் இச் செய்தி தொடர்பாக இது வரையில் எதுவிதமான கருத்தும் வெளியிடப்படவில்லை!

## செத்தும் கெடுத்தான் !



பல வன்செயல்கட்கும் முன்னூறுக்கும் மேற்பட்டவர்களின் கொலைக்கும் காரணமாக இருந்த அப்துல் மொல்லாவுக்கு டாக்காவில் மரண தண்டனை விதிக்கப் பட்டது. பாகிஸ்தானின் பிடியில் இருந்து விடுபடும் பொருட்டு 1971 ஆம் ஆண்டு பங்களாதேஷில் இடம் பெற்ற போராட்டத்தின் போது அப்துல் மொல்லாவினால் நாடெங்கும் வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இந்த வருட ஆரம்பத்தில் மெல்லா கைது செய்யப்பட்டதில் இருந்து இடம் பெற்ற பல வன்செயல்களின் காரணமாக இருநூற்று ஐம்பது பேர் கொல்லப் பட்டுள்ளனர். நீதியின் நெடும் கரம் விதித்த முடிவினைக் கேட்ட பலர் கொடி பிடித்து ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர்.அதே சமயம் மீர்பூரின் வெட்டியான் எனப் பட்ட மொல்லாவின் மரண தண்டனையின் பின் அவனது ஆதரவாளர்களால் மேற் கொள்ளப்பட்ட கலவரங்களின் பயனாக பல நடுநிலையாளர்களும், இந்துக்களும் தாக்குதலுக்கு உள்ளானார்கள் எனவும் ஏறக குறைய இருபது பேர் கொல்லப் பட்டு பலரது உடைமைகள் சேதமாக்கப்பட்டு உள்ளதாகவும் அறியக் கிடைக்கின்றது.

## மழை விட்டும் தூவானம் விடவில்லை!

தெற்கு சூடானின் ஜனாதிபதி சல்வா கிய்ர் அவரது மாஜி உதவியாளரான ரிக் மக்கார் என்பவரின் ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியில் இருந்து உயிர் தப்பி இருக்கின்றார். பல போராட்டங்களுக்கு முகம் கொடுத்து 2011ம் ஆண்டில் சூடான் நாட்டு அரசின் பிடியில் விடுபட்டு தெற்கு சூடான் பிரிந்ததில் இருந்து நாட்டின் அரசாங்கம் அமைதியை பேணுவதில் தொடந்து பல பிரச்சனைகள் உள்நாட்டில் இடம் பெறுகின்றன.கடந்த சில நாட்களாக தொடர்ந்த குண்டு வெடிப்புக்கு மத்தியில் அரசின் தொலைக் காட்சியும் தடைப் பட்டது. மீளவும் அரச தொலைக் காட்சியில் தொடர்பு ஏற்பட்ட போது, அரசாங்கத்திற்கு எதிரான சதி முறியடிக்கப் பட்டதாகவும் தாம் இது போன்ற சதிகளுக்கு அஞ்சப்போவது இல்லை எனவும் ஜனாதிபதி சல்வா கய்ர் சூளுரைத்தார். இருந்தபோதிலும் தொடர்ந்த குண்டு வெடிப்புகள் ஆங்காங்கு இடம் பெறுவதாக செய்திகள் கிடைக்கின்றன.

## விடுவிக்கப்பட்ட பெண் பலிக்கடாக்கள்!

பதவி நீக்கம் செய்யப்பட்ட மாஜி முதல்வர் மொகமட் மோர்சிக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் செய்தமையால் கைது செய்யப்பட்ட இருபத்தொரு பெண்கள் எகிப்திய நீதி மன்றத்தினால் பதினோரு வருட சிறைத் தண்டனையில் இருந்து விடுதலை செய்யப் பட்டுள்ளனர். அலெக்சாந்திரியாவில் குறைந்த அளவிலான பெண்கள் பலூன்களை ஏந்தியபடி மேல் கொண்ட ஆர்ப்பாட்டத்தினை எகிப்திய இராணுவ அரசு கையாண்ட முறை எகிப்து பூராவும் எதிப்பு அலைகளை ஏற்படுத்தி இருந்ததுடன் சர்வதேச அளவில் சலசலப்பினை ஏற்படுத்தியதும் குறிப்பிடத்தக்கதாகும். முஸ்லிம் சகோதரத்துவ கட்சிக்கு வெளிப்படையாக ஆதரவு வழங்குவதனை கட்டுப் படுத்தும் நடவடிக்கைகள் தற்போதைய இராணுவ அரசினால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

## போராளிகளுக்கு கையா கயிறா!

பிலிப்பைன்ஸ் நாட்டு அரசாங்கம் அதன் முஸ்லீம் சுதந்திர முனைப்புடன் சமாதானப் பேச்சுகளுக்கான பொதி ஒன்றினை அறிவித்து உள்ளது. பல சகாப்தங்களாக இடம் பெற்று வரும் போராட்டங்கள் ஏறக குறைய இதுவரை ஒரு இலட்சம் உயிர்களைக் கொள்ளை கொண்டுள்ளது. கடந்தவாரம் மோரோ இஸ்லாமிய விடுதலைக் கட்சியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி தெற்குப் பகுதியில் உள்ளூர் ஆட்சி அதிகாரங்கள் கொண்ட பாங்சாமோரோ எனப்படும் பிரதேசம் உருவாக்கப் பட்டுள்ளது. எனினும் பாதுகாப்பு, பொருளாதார வெளிநாட்டு அமைச்சு அதிகாரங்கள் மனிலாவில் ஜனாதிபதி பெனிக்னோ அகுவிநோவின் கட்டுப்பாட்டில்தான் தொடர்ந்தும் இருக்கும்.மேலும் அரசினால் வரவேற்கப்பட்ட ஆயுதங்களைக் களையும் உடன்பாட்டில் மற்றைய புரட்சிக் குழுக்கள் கலந்துகொள்ளவில்லை என்பது பிலிப்பைன்ஸ் நாட்டின் பங்கப்படும் அமைதிக்கு எந்த அளவில் பங்களிப்புச் செய்யும் என்பது கேள்விக் குறிதான்!

# ஈராக்கில் குண்டு வெடிப்பு

ஈராக்கின் பரபரப்பான மார்க்கெட் பகுதியில் நிகழ்ந்த குண்டு வெடிப்பு சம்பவங்களில் 8 பேர் உடல் சிதறி பரிதாபமாக பலியாகினர்.

வன்முறைக்கு விடுமுறை அளிக்க மறுத்து வரும் ஈராக்கில் சமீபகாலமாக வெடிகுண்டு தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன.

ஷியா ஆட்சிக்கு எதிராக சன்னி பிரிவினரும், சன்னி பிரிவினரை பழிவாங்க ஷியா இனத்தவரும் நடத்தி வரும் 'நீயா? நானா?' சண்டையில் ஏராளமான அப்பாவி பொதுமக்கள் பலியாகி வருகின்றனர்.

இந்த ஆண்டின் துவக்கத்தில் இருந்து இதுவரை தீவிரவாத தாக்குதல்களில் 6 ஆயிரத்து 600 பேர் தங்களது இன்னுயிரை இழந்துள்ளனர்.


இந்நிலையில், தலைநகர் பாக்தாத்தில் இருந்து 175 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்திருக்கும் டுஸ் குர்மாட்டுவில் உள்ள ஆடு மற்றும் கோழி விற்பனை செய்யும் மார்க்கெட்டுக்கு முஸ்லிம்களின் விசேஷ நாள் என கருதப்படும் வெள்ளிக்கிழமை தினமான இன்று ஏராளமான மக்கள் இறைச்சி வாங்குவதற்காக வந்திருந்தனர்.

பரபரப்பாக வியாபாரம் நடந்துக் கொண்டிருந்த போது அந்த இடத்தில் அடுத்தடுத்து 2 குண்டுகள் வெடித்தன. குண்டுகள் வெடித்த வேகத்தில் 8 பேர் உடல் சிதறி பரிதாபமாக பலியாகினர். படுகாயமடைந்த 25க்கும் மேற்பட்டோர் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

## அழகு சாதன உரிமையாளருக்கு சிறை!



பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த அழகுசாதன நிறுவனம் ஒன்று செயற்கை மார்பகங்களைத் தயாரித்து விற்பனை செய்துவந்தது. இந்த நிறுவனத்தின் தயாரிப்புகளை 65 நாடுகளைச் சேர்ந்த 3,00,000 பெண்கள் உபயோகித்துள்ளனர். இதில் பயன்படுத்தப்பட்ட சிலிகான் ஜெல் என்ற மூலப்பொருளின் தரம் குறைவாக இருந்ததினால் இத்தகைய செயற்கை மார்பகங்கள் விரைவிலேயே கிழியத் தொடங்கின.

கடந்த 2011 ஆம் ஆண்டில் அதிகரித்த இந்த சிகிச்சையின் தோல்வியால் ஏற்படும் சுகாதார சீர்கேடு குறித்த பயம் பெண்களிடையே எழத்தொடங்கியது. 5,000க்கும் மேற்பட்ட பெண்கள் பிரான்சில் இந்த முறைகேடு குறித்து புகார் மனு செய்துள்ளது மிகப்பெரிய வழக்காக கருதப்பட்டது.

ஏற்கனவே இந்த மோசடி வழக்கில் சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் நான்கு பேர் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டு அவர்களுக்கு குறைந்தபட்சத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது இந்த நிறுவனத்தின் உரிமையாளரான ஜீன் கிளாட் மாசுக்கு நான்கு வருட சிறைத்தண்டனையை அளித்துள்ள மார்செயில் நீதிமன்றம், 75,000 யூரோக்கள் அபராதத் தொகையையும் விதித்து தீர்ப்பளித்துள்ளது. பிரிட்டனைச் சேர்ந்த 47,000 பெண்கள் இந்த சிகிச்சையை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதியை நீக்கத் தேவையில்லை என்று கூறிய பிரிட்டிஷ் சுகாதார அதிகாரிகள், பின்னர் பாதிக்கப்பட்ட பெண்களின் நிம்மதிக்காக மாற்று அறுவை சிகிச்சையை அளிக்க முன்வந்தனர்.




IMPORTANT INFORMATION - UK IMMIGRATION

UK IMMIGRATION RULES HAVE CHANGED

UKBA & CAPITA Are chasing to remove illegal immigrants. You may be one of them! Hurry before you are picked! No time to waste!

CALL US TO BOOK AN APPOINTMENT TO REGULARISE YOUR STAY AND AVOID REMOVAL: 020 8542 5222 • 020 8682 4494 • 07769 185 592

kilc_work@yahoo.co.uk Kulendran Immigration Law Chambers 90 High Street, Colliers Wood, SW 19 2BT

# இரங்கும் இல்லத்தின் இவ்வருடத்தின் இரண்டாவது நிகழ்ச்சி

ஊரில் வாழும் உறவுகளுக்கு உதவுவதற்கு "இரங்கும் இல்லத்தின் நிகழ்ச்சி இங்கிலாந்தின் லண்டன் மாநகரில் 28. 12. 2013 இல் நடைபெற்றது. வரவேற்புரையை திருமதி. ஸ்ரீராதாசிற்சபேசன் அவர்கள் தமிழ் ஆங்கில மொழிகளில் உள்ளம் உருக எடுத்துரைத்தார்.

திரு.தயாளன், திருமதி.லதாதயாளன், திருமதி. மணிமேகலை நாகேஸ்வரன் ஆகியோர் நுழைவுவாசலில் இருந்து இன்முகம் நல்கி வருவோரை உபசரித்து வரவேற்றார்கள்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், நலன் விரும்பிகள் எனப்பலர் மண்டபம் நிரம்ப வருகை தந்திருந்தார்கள். கண்ணுக்கழகிய ஆடல், காதுக்கினியபாடல், நாகுவைக்கப் பானங்கள், சிற்றுண்டிகள், இராப்போசனம் என்பவற்றுடன் ஆனந்தமாக அகமகிழ்ந்தார்கள். இந்த ஆனந்தமான சூழ்நிலையில் பலபிரமுகர்களின் சிறப்புரைகள் இடம் பெற்றன.

கனடா நாட்டில் இருந்து வருகை தந்த திரு.லோகேந்திரலிங்கம் அவர்கள், இவ்விழாவுக்கு விசேடமாகத் தலைமை தாங்கினார். இவர் 20 வருடங்களாக நடாத்தி வருகின்ற கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர்.

அடுத்து சிறப்பு விருந்தினராக இங்கிலாந்தின் கிங்ஸ்டன் பகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் மதிப்புக்குரிய திரு.யோகாயோகநாதன் அவர்கள்உரையாற்றினார்.

தொடர்ந்தும் ஐரோப்பாவின் முதல் தமிழ் வானொலி உரிமையாளர் திரு.நாடாமோகன் அவர்கள், உதவும் கரங்கள்அமைப்பின் ஸ்தாபகர் சந்திரமோகன் அவர்கள், அம்பாறை விபுலானந்தர் புனர்வாழ்வு அமைப்பு ஜெகநாத பிள்ளை அவர்கள், ஊர்காவாற்துறை புனித அந்தோனியார் கல்லூரி மன்றத் தலைவர் மனோமனவேற்ப்பிள்ளை அவர்கள், நல்லூர் குமரன் உரிமையாளர் சமூகத் தொண்டன் வசந்தன்அவர்கள் எனப் பலபிரமுகர்கள் உரையாற்றினார்கள்.

திரு. பிரேம்ராஜ் அவர்கள் அழகிய அடுக்கு வசனங்களாலும், இனியகுரலாலும் நிகழ்ச்சியைத் தொங்க விடாது நடாத்திச்சென்றார்.

திரு. திருமதி மதனிவியஜாகுமார் தம்பதிகள் நடனங்களை ஒழுங்கு செய்து உதவினார்கள். அதிர்ஷ்டலாபப் பரிசில்கள், ஏலப்பரிசில் எனச் சிலர் பரிசில் பெற்று மகிழ்ந்தார்கள். மேலும் உறவுகளுக்கு உதவ வேண்டும் என இன்னும் சிலர் மேலதிகமாக நிதி உதவி செய்தார்கள்.

இரங்கும் இல்லத்தின் நிதிசேர்ப்பு விழா மிகவும் வெற்றியாக நடைபெற்றது. உறுதுணையாகவிருந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் இரங்கும் இல்லம் தனது இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றது.

## மரண அறிவித்தல்



யாழ். சரவணையைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா சரஸ்வதி அவர்கள் 31122013 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற நடராஜா, தெய்வானை பிள்ளை (நாரந்தனை) தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி கந்தையா(காரைநகர்) தம்பதிகளின் அன்பு மருமகளும்,


காலஞ்சென்ற நடராஜா அவர்களின் அன்பு மனைவியும்,

தர்மலக்சுமி(ஜெர்மனி), காலஞ்சென்ற கந்தசாமி, விஜயரட்ணம் (பிரான்ஸ்), சத்தியலக்சுமி(சாந்தி இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

காலஞ்சென்ற மகேஸ்வரி, காலஞ்சென்ற முத்துராசா, காலஞ்சென்ற பூமணி, வடிவேலு(ராசு), றுக்குமணி, தாரணதேவி, காலஞ்சென்ற மகாலக்சுமி, காலஞ்சென்ற சிவசுப்ரமணியம்(சிவம்), ராஜேஸ்வரி (மலர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானசேகரம், புவனேஸ்வரி (சாந்தி), சந்திரலீலா, நிமலநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும்ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## காலமானார்



யாழ். உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம்

தெய்வேந்திரம் அவர்கள் 29-12-2013 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற பொன்னம்பலம், மாசிலாமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை, இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், வசந்தராணி அவர்களின் பாசமிகு கணவரும், அனுராதா, அனுராஜ்(கண்ணன்), அருணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


## அனைத்துலகப் புத்தகப் பரிசுப்போட்டி

### தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம், மலேசியா.

டான் ஸ்ரீ கே.ஆர்.சோமா மொழி இலக்கிய அறவாரியம் வழங்கும்

### அனைத்துலகப் புத்தகப் பரிசுப்போட்டி
### மலேசியப் புத்தகப் பரிசுப்போட்டி

**போட்டிக்கான விதிமுறைகள்**

அ. துறை - நாவல், வரலாறு மற்றும் ஆய்வு சார்ந்ததாக இருக்கலாம்.
ஆ. மொழி - தமிழ்
இ. மொழித்தரம் - தமிழ் மொழியின் இலக்கணம், சொல்லாட்சி, மரபு ஆகிய கூறுகளில் தரமுடையதாக இத்தல்.
ஈ. சொந்தப் படைப்பு - கடந்த 2012 மற்றும் 2013-ஆம் ஆண்டில் வெளிவந்த/ வர இருக்கும் முதல் பதிப்பு நூலாக இருக்க வேண்டும்.
உ. நூலின் அமைப்பு - பதிப்புத்தரம்: ஏற்புடைய தரமுடையது.
ஊ. படைப்புத்திறன் - அந்தத் துறைக்குரிய கலைக்கூறுகள், மரபு, உத்திகள் ஆகியவற்றுடன் பண்பாட்டு வரம்புகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
எ. படைப்பாளர் 31-3-2014-க்குள் தமது நூலில் 3 படிகள் அனுப்பி வைக்க வேண்டும். பரிசுக்குரியவருக்கு கடித வாயிலாக தெரிவிக்கப்படும். அறக்கட்டளையின் அகப்பக்கத்திலும் நாளிதழ்களிலும் பரிசு முடிவு பற்றி அறிவிக்கப்படும். 2014-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் கோலாலம்பூரில் பரிசளிப்பு விழா நடைபெறும். போட்டியின் முடிவு சம்பந்தமாக எந்தவித கடிதத் தொடர்பும் ஏற்புக் கொள்ளப்பட மாட்டாது.

குறிப்பு: மலேசிய படைப்புகளும் அனைத்துலகப் போட்டிக்கு எடுத்துக் கொள்ளப்படும். மேலும் விபரம் வேண்டுவோர் கீழ்க்கண்ட அறவாரியத்தின் அலுவலகத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். இணையதளத்திலும் பார்க்கலாம்.

போட்டிக்கு அனுப்ப வேண்டிய விலாசம்.
டான்ஸ்ரீ கே.ஆர்.சோமா மொழி - இலக்கிய அறவாரியம்
தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம் லிமிடெட்

NATIONAL LAND FINANCE CO-OPERATIVE SOCIETY LIMITED
LEVEL 10 WISMA TUN SAMBANTHAN, NO.2, JALAN SULTAN SULAIMAN. P.O. BOX: 12133,
50768 KULALAMPUR, MALASIA. htt://tansrisomabookaward.org/


## ஆளை விடுடா சாமியோய்!



இந்த வருடத்தின் உதாரபுருஷர் என இரு பிரபலமான அமெரிக்க சஞ்சிகைகளால் புனித பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவு செய்யப்பட்டு இருக்கின்றார். இந்தவாரத்து டைம் இதழிலும் தி அட்வகாட் என்ற இதழிலும் முன் அட்டையில் பாப்பரசர் பிரான்சிஸின் படம் பிரசுரிக்கப் பட்டு பாராட்டுதல் செய்யப்பட்டு உள்ளது. இன்றைய சமுதாயத்துப் பிரச்சனைகள், ஏறக குறைய 1.2 பில்லியன் கத்தோலிக்க மக்களின் மனங்களில் பதிப்பை ஏற்படுத்தக் கூடிய வல்லமை உள்ள போப்பாண்டவரை தமது மாளிகையை விட்டு வெளியே தெருவுக்கு வந்து மனம் திறந்து பகிரங்கமாக பேச வைக்கின்றது என டைம் வர இதழ் கூறுகின்றது. அதே நேரம் ஓரினச் சேர்க்கையாளர்கள் விடயத்தில் ஆண்டவனிடம் அடைக்கலம் தேடுபவர்களுக்கு நியாயம் வழங்குபவனாக தான் எவ்வாறு இருக்க முடியும் என பாப்பரசர் கூறியதாக தி அட்வகாட் இதழ் பிரசுரித்து உள்ளது.

## கில்லாடியோகி !

பலராலும் விரும்பப்படும் யோகா பயிற்சியை தாமும் பயிற்றி பிரபலமான பிக்ரம் சவுத்திரி பல சமூக விரோதச் செயல்களுக்கு ஆளாகி உள்ளார். சான்பிரான்சிஸ்கோவில் பிக்ரம் வெப்பு யோகா என்ற பெயரில் சூடு கூட்டப் பட்ட அறைகளில் யோகா பயிற்சி அளித்து பாலியல் தொல்லை, வல்லுறவு, ஏய்ப்பு போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டார் எனப் பலர் நீதி மன்றத்தில் புகார் செய்து உள்ளனர். குரு என்று கூறிகொண்டு தமது தொகுப்பினர் மத்தியில் பலவீனமானவர்களை இனம் கண்டு துஷ்பிரயோகம் செய்ததாகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.இந்த வருட ஆரம்பத்தில் இடம் பெற்ற முதலாவது முறைப்பாட்டின் போது தம் மீது கூறப்படும் பொய்க் குற்றச் சாட்டினால் தாம் பெரிதும் ஏமாற்றத்திற்கு உள்ளானதாகக் கூறி இருந்தார். தற்போது அவரது சட்ட ஆலோசகர் உட்பட வெறும் நான்கு நபர்கள் பிக்ரம் சவுத்திரி மீது இட்ட மோசடி வழக்குகள் நிலுவையில் உள்ளன.

## படி உயர்வு, பழி உயர்வு !

தமது சம்பளத்தை உயர்த்துமாறு ஆர்ஜண்டினாவில் உள்ள பதினேழு மாகாணங்களில் பொலீசார் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து பரவலாக ஆர்ஜண்டினாவிலுள்ள பல நகரங்களில் கடைகளும், தனியார் உடைமைகளும் கொள்ளை அடிக்கப்பட்டும், சேதப்படுத்தப்பட்டும் பல பலாத்கார செயல்கள் இடம் பெற்றுள்ளன. கடைகள் சூறையாடப்பட்ட போது ஏழு பேர் கொல்லப்பட்டதுடன் பல இடங்களில் வீடுகளும் சூறையாடப்பட்டுள்ளன. முதலில் இவ்வாறான முறைகேடுகள் இடம் பெற்ற கொர்டோபாவில் நூற்றுக்கணக்கான வர்த்தக நிலையங்கள் சேதப்படுத்தப்பட்டு இருவர் கொல்லப்பட்ட பின்னர் மாகாண முதல்வரால் போலீசாரின் வேதனம் இரு மடங்காக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. புவனர்ஸ் அயர்சின் முதல்வர் வேதன உயர்வினை வழங்க ஒப்புக் கொண்டதனால் அங்கு பொலிசாரின் வேலை நிறுத்தம் தவிர்க்கப்பட்டுள்ளது.




# இந்தியாவில் எப்படி?

**கொஞ்சம் கற்பனை பண்ணிப் பாருங்க.. வருடம் என்று ஒன்று இல்லை என்றால்? கஷ்டம்தான்.. எல்லாத்துக்கும் ஒரு கணக்கு வேண்டும்தான? அதான்.. காலத்தை கணக்கு பண்ணுறதுக்கு 'வருட' முறை வந்திச்சு.**

பூமி சூரியனை சுற்றி வரும் பாதையில் ஒரு குறிப்பிட்ட இடத்தை அடையாளமாக வைத்துக் கொண்டு.. அது, அடுத்த முறை அதே இடத்திற்கு வந்தால், ஒரு ஆண்டு முடிந்து அடுத்த ஆண்டு ஆரம்பமாகிறது. இவ்வாறு காலத்தை கணக்கிடுவதால், கால நிலைகளை மனதில் நிறுத்தி, அதற்கேற்றவாறு நாம் வாழ வழிமுறைகளை செய்து வருகிறோம். இந்தக் கணக்கு இல்லையென்றால், பருவநிலை எதிர்பாராமல் வந்து செல்லும், மக்களுக்கு கஷ்டத்தை தரும். (இப்ப மட்டும் என்ன வாழுதாம்..?)

அந்த வகையில் உலக அளவில் பொதுவான ஆண்டு முறையாக கிருகோரியன் (gregorian) முறையில் 2010ம் ஆண்டு முடிந்து, 2011-ம் ஆண்டு வருவதை நாம் அனைவரும் ஆவலோடு வரவேற்று.. உறவினர் மற்றும் நண்பர்களுக்குள் தத்தம் வாழ்த்துக்களை பரிமாறிக் கொள்கிறார்கள், முதாலவது நாளான ஜனவரி ஒன்றில்.

இந்தியாவில் பலவித நாட்குறிப்பு முறை இருப்பதனால், பல புத்தாண்டு நாட்கள் கொண்டாடப் பட்டு வருகிறது. அவற்றுள் எனக்குத் தெரிந்த சிலவற்றை பட்டியல் இடுகிறேன் உங்கள் பார்வைக்காக..

## வேறு பல புத்தாண்டு தினங்கள் [இந்தியாவில்] :

**போகபிகு :** இதுதான் அசாமியர்களின் புத்தாண்டோட பேரு. இது ஒரு அரசு விழாவாகும். பாரம்பரிய உடைகளை அணிவர் ஆண்களும் பெண்களும். பெரும்பாலும் ஏப்ரல் மத்தில (13, 14 15 தேதிகள்) வரும். 'பிகு' முறை நடனங்கள் ஆடியும், 'ஹுசுரிஸ்' எனப்படும் கீதங்களைப் பாடியும் கொண்டாடுவார்கள். சில நாட்கள் வரை இந்த கொண்டாட்டங்கள் தொடரும்.

**நபோவர்ஷோ :** இது வங்காள மக்கள் கொண்டாடும் புத்தாண்டு தினமாகும். வீடுகளை புத்தம் புதிய மலர்களால் அலங்கரித்தும், வண்ண அரிசிகளை வைத்து கோலங்கள் இடுவார்கள். இதனை 'அல்பன' என அழைப்பார்கள். பெண்கள் சிவப்பு மற்றும் வெள்ளை சேலைகளை அணிவர், ஆண்கள் வேஷ்டி குர்தா அணிவார்கள். பெரும்பாலும் இதுவும் ஏப்ரில் 13 , 14 , 15 தினங்களுக்குள் வரும். வருடத்தின் முதல் மாதம் பைகாசி (வைகாசி) எனவே, இந்த தினத்தை பைசாகி எனவும் சொல்லுவர்.

**பெஸ்து வரஸ் :** இது குஜராத்திய புது வருட தினம் ஆகும். தீபாவளிக்கு அடுத்த அல்லது இரண்டாம் நாள் வரும். புத்தாடை உடுத்தி, 'கோவர்த்தன் பூஜா' என்னும் பாரம்பரிய வழிபாட்டு முறைப்படி, கோவர்த்தன பர்வதத்தினை நினைத்து வழிபட்டு. உற்றார் உறவினர் இல்லங்களுக்குச் சென்று இனிப்புகளை பரிமாறிக் கொள்வார்கள். தீபாவளிமுதல் அடுத்து வரும் ஐந்தாறு தினங்கள் வரை கொண்டாட்டம்தான். பள்ளி, கல்லூரி அலுவலகங்களுக்கு விடுமுறைதான். வணிக வழக்குகளும் இருக்காதுதான். புதிய காரியம் எதனையும் அதற்குப் பின்னரே ஆரம்பம் செய்வார்கள். தீபாவளியை விட, புத்தாண்டை பட்டாசு, வானவேடிக்கைகளுடன் வெகு விமரிசையாக கொண்டாடுவார்கள்.

**யுகாதி :** யுகத்தின் (வருடம்) ஆதி (ஆரம்பம்) என்கிற அர்த்தத்தில் இந்த நாள் மார்ச் 13 முதல், ஏப்ரல் 15க்குள், அமாவாசையை ஒட்டி வரும். இதனை ஆந்திர மாநில தெலுங்கு பேசும் மக்கள் கொண்டாடுகின்றனர். வீடுகளை சுத்தம் செய்து, மாவிலை, தென்னை இலை தோரணம் கட்டி, காலையில் எண்ணெய் தேய்த்துக் குளித்து புத்தாடை உடுத்தி, இறைவனுக்கு படையலிட்டு, உற்றார் உறவினர்களுக்கு இனிப்புகளை பரிமாறி கொண்டாடுவார்கள். 'யுகாதிப் பச்சடி' எனப்படும் பல்சுவை பச்சடி இன்றைய சிறப்பு உணவு பதார்த்தமாகும்.

**விஷு :** இந்த பெயரில் கேரளா மாநிலத்தவர் கொண்டாடுகிறார்கள். அன்றைய தினத்தில் காலையில் எழுந்தவுடன் கண்ணில் படும் பொருட்கள் மிகவும் நல்லதாக இருக்க வேண்டும் என்பதனாலேயே, அருகில் ஓலைச் சுவடி, தங்க ஆபரணங்கள், வெள்ளைத் துணி, பச்சை அரிசி, மஞ்சள் வெள்ளரி, வெற்றிலை, கொன்ன மலர்கள், பாதியாக வெட்டப்பட்ட பலாப் பழம், புனித கிரந்தங்கள் மற்றும் தேங்காய் ஆகியவற்றினை வைத்திருப்பார்கள் எனக் கேள்விபட்டேன். காலையில் புனித நீராடி, 'கொடி வஸ்திரம்' அணிந்து பாரம்பரிய ஆட்டம் பாட்டத்துடன், இனிப்பான அன்னமுண்டு கொண்டாடுவார்கள்.

**பைசாகி :** சீக்கய குருமாரின் அறிவுரைப் படி, ஜாதிகளை ஒழித்து 'கால்ச பந்த்' எனப் பெயரிட்டு நிறுவிய நாளையே, அவர்கள் புத்தாண்டு தினமாக 'பைசாகி' எனப் பெயரிட்டு கொண்டாடுகின்றனர். இது அவர்களின் அறுவடை திருநாளும் ஆகும். ஆண்களும் பெண்களும் ' ஜட்டா ஆயி பைசாகி' (வந்து விட்டாள் பைசாகி ) எனப் ஆடிப் பாடி மகிழ்ச்சியாக கொண்டாடுவார்கள்.

**தீபாவளி :** ராஜஸ்தானில் இருக்கும் மார்வாடிகள், தீபாவளி தினத்தையே புத்தாண்டு நாளாக கொண்டாடுவார்கள். இந்த தினத்தில் புதிய செயல்கள் ஆரம்பித்தால் அவை வெற்றி கரமாக முடியும் என்ற நம்ம்பிக்கை கொண்டவர்கள்.

**குடி பாட்வா :** 'பாட்வா' அப்படீன்னா ஒரு அறுவடை பருவம் முடிந்து அடுத்த பருவம் ஆரம்பம் என்பதாகும். இதுவும் பெரும்பாலும் 'யுகாதி' யுடன் சேர்ந்து வரும். மராட்டியர்கள் கொண்டாடுவதாகும். பிரம்மா புராணத்தின் படி, இந்த நாளில், அண்டம், பிரம்மாவினால் தோற்றுவிக்கப் பட்டது. ராமன், ராவணனை போரில் வென்று வெற்றிச் சக்கரவத்தியாக ஊர் திரும்பிய நாளாகவும் அவர்கள் கொண்டாடுகிறார்கள். பிரம்மாவின் கொடியானது, மகிழ்ச்சியையும், வெற்றியையும் குறிப்பதானால், எல்லா வீடுகளிலும் அந்தக் கொடியினை ஏற்றி பிரம்மாவை சிறப்பிக்கிறார்கள்.

**தமிழ்ப் புத்தாண்டு தினம் :** இதப் பத்தி நா சொல்லி உங்களுக்கு தெரியுறதுக்கு ஒண்ணுமே இல்லை. நாமலாம் ரொம்பவே அதிர்ஷ்டம் செஞ்சவங்க.. நமக்குத்தான் வருஷத்துல ரெண்டு தடவை வருமே இந்த நாளு.. ஒண்ணு அரசுக்காக.. மத்தது நமக்காக..

# புத்தாண்டு கவிதை

இதயம் ஒரு வெற்று காகிதம்தான்
வருடத்தின் இறுதி நாள் இன்று .
இதுவரை நிறைவு பெறாத
ஆசைகளும், கனவுகளும் மட்டுமே
இதில் நிரப்பப்பட்டு இருந்தது இதுநாள் வரை.
அவற்றிற்கும் விடுமுறை கொடுக்கும்
தூரம் அருகில் வந்துவிட்டது.
இன்னும் சில மணி நேரங்கள்
மட்டுமே மீதம் உள்ளது!

கனவுகள் கூட கணக்கத் தொடங்கிவிட்டது
இனியும் போலியாய் உறங்குவதில்
என்ன நியாயம்?
இதுநாள் வரை நிழல்களுடன்
நிஜங்களாக வாழ்ந்தது போதும்.
இனியும் நிழலில் நிஜங்களை
இழக்க விருப்பம் இல்லை.!
ஆசைகளை மட்டும் அடுக்கி அடுக்கி
நிறைவேறவில்லையே என்று தினம்
எண்ணி எண்ணி பாதி தாகம் தீர்த்த
அந்த அவல நாட்கள் இனியும் வேண்டாம்.!

கவலைகளை மட்டுமே எண்ணி எண்ணி
இரவுகளில் எல்லாம் விழிகள்
தூக்கம் தொலைத்த
அந்த இரவுகளைக் கூட
நான் எண்ணிப் பார்க்க விரும்பவில்லை !.

நாளை நாளை என்று தினங்களும்,
வாரங்களும், மாதம் கடந்து, இன்று
வருடம் இழக்கும் நிலைக்கு வந்துவிட்டது.!

துப்பும் எச்சில் கூட
தூரம் சென்று விழவேண்டும்
என்று எண்ணுகிறது மனது.
ஆனால் தோல்விகளை மட்டும்
தோள்களில் சுமக்க எப்படித்தான்
விரும்பியே ஏற்கிறதோ தெரியவில்லை.!

இனி வரும் நாட்களில் முடிவுரைகள் கூட
முற்றுப்புள்ளியின்றிதான் எழுதப்படும்.
இதுநாள் வரை தோல்விகள் சுமந்த
இந்த தோள்கள் இனி வரும் நாட்களில்
இமயம் தாண்டும் சாதனைகளை சுமக்கும்.!

இதுநாள் வரை உதடு சுழித்து
உதறித் தள்ளிய பணிகள்
எல்லாம் பனித்துளி வசிக்க புதிதாய்
புன்னகையுடன் ஒரு பூந்தோட்டம் அமைக்கும்.

கல்விக்காக மூடியக் கதவுகளை
தட்டி தட்டி முற்றுப்புள்ளி எட்டிய
கனவுகளுக்கு எல்லாம் இனி விடுமுறை.!
இனி வரும் நாட்களில் ஏழைகள்
இமை திறக்கும் திசையெல்லாம்
கல்விக் கூடங்கள் திறந்தே இருக்கும்.!

நாம் சாலை கடக்கும் நேரம் எல்லாம்
பசியால் கையேந்திய ஏழைகளை இனி
பார்ப்பது கூட கடவுளை
பார்ப்பது போல் தோன்றும் நிலை வரும்.!

ஏற்றத் தாழ்வுகள் என்ற வார்த்தைகளே
உலக அகராதியில் இருந்து நீக்கப்படும்.
இனி வரும் நாட்களில் எல்லாம்
எல்லோருக்கும் ஏற்றம்தான் என்ற
புதுமை வார்த்தைகள் ஒவ்வொருவரின்
சுவாசக் காற்றிலும் அச்சிடப்படும் .

இப்படி புதிதாய் பல இலட்சியங்களை
நான் நிரப்பத் தொடங்கிவிட்டேன்
இன்று என் இதயம் ஒரு வெற்று காகிதம்.!

எதிர்காலத்திற்கு என்று எண்ணி எண்ணி
சேர்த்து, நிகழ்காலத்தில் வாழாமல்
வசந்தமின்றியே இறந்துவிட்டது வாழ்க்கை.
இனியும் அறிந்தே இந்த தவறுகள் வேண்டாம்.
நாளை முதல் உங்களின் இதயங்களும்
ஒரு வெற்று காகிதம்தான்.
அதில் நிரப்பத் தொடங்குங்கள்
பல இலட்சிய எண்ணங்களை.

இது நாள் வரை விலை கொடுத்து
வாங்கிய புன்னகை எல்லாம்
இனி உங்களின் இதழ்களின்
பக்கத்தில் காத்து கிடக்கும்.
நீங்கள் தொலைத்த வெற்றிகள் எல்லாம்
இனி உங்களுக்கு
ஒரு புது முகவரி தேடித் தரும்.

புன்னகையே உங்களுக்காக இதழ்களின்
பக்கத்தில் காத்து கிடக்கும் பொழுது
புதிதாய் பிறக்கும் இந்த புத்தாண்டு
காத்திருக்காதா என்ன .?
நம்பிக்கையுடன் அடியெடுத்து வையுங்கள்
வெற்றி நிச்சயம்.!
அனைவருக்கும் என் இனிய
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் .



# ஆங்கிலப் புத்தாண்டின் வரலாறு..!

இதிலென்ன சந்தேகம் என்று நினைக்கின்றீர்களா? இதில்தான் ஒரு சந்தேகம்..!

ஓர் ஆண்டிற்கு ஒரு நாள் தானே முதல் நாளாக இருக்க முடியும்.

ஆனால் நாமோ பல நாள்களை புத்தாண்டாக கொண்டாடுகிறோம்

தை 1 - தமிழ்ப் புத்தாண்டு
யுஹாதி - தெலுங்குப் புத்தாண்டு
முஹர்ரம் - ஹிஜ்ரிப் புத்தாண்டு

இப்படி பல பல புத்தாண்டுகள் கொண்டாடப் படுகின்றன.

குறிப்பாக ஆங்கிலப் புத்தாண்டின் மூடத்தனமான வரலாறு பற்றி நாம் தெரிந்து கொள்வது மிக அவசியம்.

ஆங்கிலப் புத்தாண்டின் வரலாற்றைக் கொஞ்சம் இங்கே அலசுவோம்!

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள இந்த ஆங்கில ஆண்டு முறை கிறிஸ்தவ காலண்டர் அல்ல. மாறாக இயேசுவின் பிறப்பிற்கு முன்னரே உள்ள காலண்டர் முறை ஆகும்.

இது பண்டைய ரோம, கிரேக்கர்களின் காலண்டர் முறையாகும். இந்த மாதங்களும், அதற்கான காரணங்களையும் நாம் ஆய்வு செய்தால் அது விளங்கி விடும்.

**ஜனவரி:** இது 'ஜானஸ்' என்ற ரோமக் கடவுளின் பெயர். இந்தப் பெயரை காலண்டரில் கி.மு. 700 ஆம் ஆண்டு ஜூலியஸ் ஸீஸர் மன்னர்தான் சேர்த்தார்.

**பிப்ரவரி :** இது லத்தீன் மொழி வார்த்தை. ரோமத் திருவிழா 'பிப்ரேரியஸ்' இன் நினைவாக வந்த மாதம்.

**மார்ச் :** இதுவும் லத்தீன் வார்த்தை. ரோமக் கடவுள் 'மார்ஸ்' இன் பெயராலே அழைக்கப்படுகிறது.

**ஏப்ரல் :** லத்தீன் மொழியில் 'ஏப்ரலிஸ்' என்பதுதான் ஏப்ரல் என்றாகி விட்டது. இதன் பொருள் 'திறப்பது' என்பது ஆகும். ஆரம்பத்தில் ஆண்டின் தொடக்கம் ஏப்ரல் மாதத்தில்தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 'போப்பாண்டவர்' தான் புத்தாண்டை ஏப்ரலில் இருந்து ஜனவரிக்கு மாற்றினார். இதனை ஒரு சாரார் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே ஜனவரி 1 ஆம் நாளை புத்தாண்டின் முதல் நாளாக ஏற்றுக் கொண்ட ஐரோப்பியர்கள் மற்ற ஐரோப்பியர்களைப் பார்த்து ஏப்ரல் 1 ஆம் நாள் 'முட்டாள்களின் தினம்' என்று அழைக்கத் தொடங்கினர். (ஆகா!! என்ன ஓர் அறிவுப்பூர்வமான வரலாறு?!!) சரி, விடுங்கள்! மேலே படியுங்கள்.

**மே:** 'மேயஸ்' என்ற கிரேக்கப் பெண் கடவுளின் பெயரால் இது அழைக்கப்படுகிறது.

**ஜூன்:** ரோம கடவுள் 'ஜூனோ'வின் பெயரால் இம்மாதம் அழைக்கப்படுகிறது.

**ஜூலை:** மன்னர் 'ஜூலியஸ் ஸீஸர்' பெயரால் அழைக்கப்படுகிறது.

**ஆகஸ்ட்:** மன்னர் 'அகஸ்டிஸ் ஸீஸர்' பெயரால் அழைக்கப்படுகிறது.

மீதமுள்ள செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய நான்கு மாதங்களும் 7,8,9,10 ஆகிய லத்தீன் எண்களின் பெயரிலிருந்து எடுக்கப்பட்ட வார்த்தைகளாகும். ஆக மாதங்களின் பெயர்களில் பெரும்பாலானவை கடவுளின் பெயர்கள்தாம். இது ஒரு புறமிருக்க இந்தக் காலண்டரின் மாதங்களின் நாள்களை முடிவு செய்ததிலும் 'ஒரு முட்டாள்தனமான' வரலாறு உள்ளது..

முதலில் மாதங்களின் நாள்கள் ஜனவரி முதல் டிசம்பர் வரை 30 நாள்களும் 31 நாள்களும் மாறி மாறி வந்தன.

அதாவது ஜனவரி 31 நாள்கள், பிப்ரவரி 30 நாள்கள், மார்ச் 31 . . .

இதனை ஜூலியஸ் ஸீஸர் ஏற்றுக் கொள்ளவில்லை. பிப்ரவரி மாதத்திலிருந்து ஒரு நாளை பிடுங்கி தன் பெயரில் உள்ள மாதத்திற்கு; அதாவது ஜூலை மாதத்திற்குச் சேர்த்தார். அதனால் 30 நாளாக அதுவரை இருந்த ஜூலை மாதம் 31 நாளாக மாறியது. காலண்டர் மொத்தமும் மாற வேண்டியது வந்தது.

ஆகஸ்ட் 30 நாளானது இப்படிக் கொஞ்ச காலம் போனது. பின்னர் அகஸ்டியஸ் ஸீஸரின் ஆதரவாளர்கள் ஆகஸ்ட் மாதமும் 31 நாளாக இருக்க வேண்டும் என்று கோரினர். மீண்டும் பிப்ரவரி மாதத்திலிருந்து ஒரு நாள் பிடுங்கி ஆகஸ்டில் சேர்க்கப்பட்டது. ஆக இத்தனைக் குழப்பத்திற்குப் பின்னர்தான் நாம் வைத்திருக்கும் இந்தக் காலண்டர் தயாரிக்கப்பட்டது.


இது 'கிரீகோரியன்' (Gregorian) காலண்டர் என்று அழைக்கப்படும்.


இப்படி 'முட்டாள்தனமான' ஒரு வரலாற்றை மூடிமறைத்து நம்மைப் பின்பற்ற வைத்துள்ள மேற்கத்தியர்களை உண்மையில் 'அறிவாளிகள்' என்ற சொல்ல வேண்டும். ஆக இந்தக் காலண்டருக்கும் இயேசுவிற்கும் எவ்விதத் தொடர்புமில்லை. ஆனால் எப்பொழுது கிறிஸ்தவம் 'ரோமன் கத்தோலிஸம்' என்று மாறியதோ, அந்நாள் தொடங்கி கொள்கை முதல் கலாச்சாரம் வரை அனைத்திலும் ரோம கிரேக்க அநாகரிகம் (Paganism) ஊடுருவி விட்டது.

## செய்திச் சிந்தல்கள்!

- பேரிஞர் அண்ணாவின் வளர்ப்பு மகள் கவுதமன் சென்னையில் 29.12.2013ல் சென்னையில் காலமானார்.
- வல்வெட்டித்துறை நகரசபையின் 5 உறுப்பினர்களை வெளியே நிறுத்தி வைத்து விட்டு வரவு செலவுத் திட்டம் நினைவேற்றப்பட்டுள்ளது மூன்று தமிழுத் தேசியத் கூட்டமைப்பு உறுப்பினர்களும் ஒரு ஐக்கிய மக்கள் சுதற்திர முன்னனி உறுப்பினருமே முன்னர் தோற்கடிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றியவர்கள் ஆவர்.
- போரால் இடம் பெயர்ந்த நாள் 8 லட்சத்துக்கும் அதிமான மக்களை மீள் குடியேற்றவும் காணாமல் போன ஆயிரக் கணக்கானோரத் தேடுவதற்கும் நம்பிக்கையின் அடிப்பைடையில் இலங்கை அரசு சர்வதேசத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.
- யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் கைவிடப்பட்ட நிலையில் உள்ள காணிகளை மாநகர சபை கையகப்படுத்தி துப்பரவை மேற்கொள்ள உள்ளது.
- யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஜனவரி 17ம் தேரி முதல் ஆரம்பமாகவுள்ளது யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் பிரமாண்டமான முறையில் ஏற்பாடுகள் நடைபெறுகின்னை.







உலகில் பல நூதனமா முறையில் கட்டப்பட்ட கட்டிடங்கள் உள்ளன அவற்றில் சிலதை பகிர்வோம்.

- துபாயில் மாறும் டவர். அதன் ஒவ்வொரு மாடி கோபுரமும் சுதந்திரமாகவும்,அதன் சொந்த அச்சில் நகரும். இக்கட்டிடம் அதன் வடிவத்தை முற்றாக அடி முதல் கோபுரம் வரை மாற்றிக்கொண்டே இருக்கும். <http://www.youtube.com/watch?v=NbLlt-9kCuw>
- WonderWorks அமெரிக்காவில் உள்ள ஒரு அறிவியல் பொழுதுபோக்கு மையம். இக்கட்டிடம் தலைகீழாக இருப்பது போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இதை வடிவமைத்தவர் Terry Nicholson.
- கன்சாஸ் சிட்டியில்(Kansas City) உள்ள ஒரு பொது நூலகம். ஒரு நூலகத்தை பல நூல்கள் கொண்ட ஒரு கட்டிடமாக வடிவமைத்துள்ளார்கள். 1873 இல் நிறுவப்பட்டுள்ளது


## குடிவரவு விண்ணப்பங்கள் & மேன்முறையீடுகள்

### Immigration Application and Appeals

- அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள் Fresh Applications
- உங்கள் உறவினர்களை வரவழைக்கும் விண்ணப்பம்
- இலங்கை, இந்தியாவில் பிரித்தானிய விசா நிராகரிப்புக்கு எதிரான மேன்முறையீடு
- குழந்தைகள் 7 வருடம் தொடர்ச்சியாக வசித்திருப்பின் வதிவிட விசா விண்ணப்பம்
- பிரித்தானிய குடியுரிமை விண்ணப்பங்கள் நிரந்தர குடியுரிமை விண்ணப்பங்கள்
- நாடு கடத்தலுக்கு எதிரான விண்ணப்பங்கள்
- ஐரோப்பிய நாடுகளிலிருந்து வருவோர், திருமணம் செய்வோருக்கான EEA விண்ணப்பங்கள்

1. Visitors & Dependent Visa - Human Right Claim- Immigration Detention Matters - Bail Applications
2. Social Welfare Benefits - Visa Extension
3. Entry Clearance Applicaton (Spouse - Family Reunion Visitor - Settlement - Student - Prospective Student)
4. Point based Applications: Tier 1 -Tier 5 (Student/ Entrepreneur Visas)

மொழி பெயர்ப்புச் சேவை தமிழ் - சிங்களம்

**Kulendran Immigration Law Chambers,**
90 High Street,
Colliers Wood, SW19 2BT,
0208 682 4494/ 0208 542 8222/ 07769185592,
Email: kilc_work@yahoo.co.uk

# பலதும் பத்தும்



அண்மையில் திருமணம் செய்து வைக்கும் ரோபோ, மற்றும் மாடு மேய்க்கும் ரோபோ என்பன அறிமுகமாகியிருந்தமை அறிந்ததே. இந்நிலையில் தற்போது மனிதர்களுக்கு மசாஜ் செய்துவிடக்கூடிய ரோபோ ஒன்றும் அறிமுகமாகியுள்ளது. எனினும் இந்த ரோபோ மசாஜ் செய்வது பல ஆய்வாளர்கள் மத்தியிலும் சில எதிர்மாறான கருத்துக்களை ஏற்படுத்தியுள்ளது.காரணம் குறித்த ரோபோ ஒரு இயந்திரம் ஆகையால் அதில் ஏற்படும் கோளாறுகள் மசாஜ் செய்யும் மனிதனை பாதிக்கக்கூடும் என்பதே ஆகும். எதற்கும் முதலில் வருவது எதிர்ப்பு, பின்பு சிறிது சிறிதாக மக்கள் அதை ஏற்க பழகிவிடுகின்றனர்.

அர்ஜென்டினாவை சேர்ந்த ஜோர்ஜ் ஓ டன் என்ற 59 வயது கார் மெக்கானிக், பிரசவத்தை எளிதாக்கும் வகையில் புதிய கருவி ஒன்றை கண்டுபிடித்துள்ளார்.

அதாவது பிளாஸ்டிக் பையை பயன்படுத்தி குழந்தையை மிக எளிதான முறையில் வெளியே எடுப்பது.

இந்த புதிய கருவியை பற்றி ஜோர்ஜ், தனது நண்பருடன் சேர்ந்து மகப்பேறு மருத்துவரை சந்தித்து விளக்கியுள்ளார்.அந்த மருத்துவர் ஜோர்ஜின் புதிய கருவி செயல்பாட்டை தனது மருத்துவமனையில் சோதனை செய்து பார்க்க உதவினார்.

இதனை தொடர்ந்து யூடியூப்பில் இணையத்தளத்தில் சோதனையை வெளி யிட்டதுடன், மிகச் சிறந்த மருத்து வரான மரியோ மரியால்டியை சந்தித்து பேச வைத்தார்.


சிக்கலான பிரசவ நேரத்தில் உபயோகப்படுத்தும் வகையில் எளிய கருவி இருந்தால் மருத்துவர்கள் பிரசவங்களை எளிதாகவும் சீக்கிரமாகவும் செய்யமுடியும். ஓடன் கருவி என்று பெயரிடப்பட்ட இந்த கருவி மூலம் எளிதாக பிரசவம் நடக்க கர்ப்பிணி பெண்களுக்கு மருத்துவர்கள் உதவ முடியும்.

இதில் கையால் பிடிக்கும் வகையில் உள்ள ஒரு பிளாஸ்டிக் பை உள்ளது. உராய்வை குறைக்க லூப்ரிகன்ட் செலுத்தப்பட்ட இந்த பை காற்று நிரப்பும் வகையில் உள்ளது.

இதன்மூலம் சிக்கலான பிரசவத்தில் குழந்தை வெளிவராத போது குழந்தையின் தலையை சுற்றி இந்த பிளாஸ்டிக் பையை வைத்து காற்றால் நிரப்பவேண்டும்.

இதனால் தலையை சுற்றி பிளாஸ்டிக் பை கெட்டியாக பிடித்துக் கொள்ளும், பின்னர் மெதுவாக வெளியில் இழுத்தால் குழந்தை பத்திரமாக பிரசவிக்கப்படும்.இதன்மூலம் மிக சிக்கலான பிரசவங்கள் கூட எளிதாக நடைபெறுகிறது.

இந்த கருவியை உலக சுகாதார நிறுவனம் அர்ஜென்டினா கர்ப்பிணி பெண்களிடம் சோதித்துப் பார்த்ததில், சுகப் பிரசவம் நடந்துள்ளது.



இதனால் அறுவை சிகிச்சைகள் குறையும், இந்த முறையை இந்தியா, சீனா மற்றும் தெற்கு ஆப்ரிக்காவில் பயன்படுத்த போவதாக கூறப்படுகிறது. இதன்மூலம் பிரசவ நேரத்தில் ஏற்படும் சிக்கல்களினால் இறக்கும் குழந்தைகள் மற்றும் பெண்களை காப்பாற்ற முடியும்.

இதைத் தயாரிக்க 50 டாலர்கள் ஆகிறது. கனடாவை சேர்ந்த கிராண்ட் சேலஞ்சஸ் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் பென்டன் டிக்கின்சன் கம்பெனியுடன் சேர்ந்து இந்த கருவியை தயாரிக்க உள்ளது. இந்த கருவிக்கு உலக சுகாதார நிறுவனம் விருது வழங்கியுள்ளது.




எந்தவொரு தருணத்திலும் தடங்கலற்ற இணைய சேவையை வழங்கும் முகமாக கூகுள் நிறுவனம் புரொஜெக்ட் லூன் எனும் சேவையை அறிமுகப்படுத்தவிருக்கின்றது. பறக்கும் பலூன்கள் மூலம் கீவீதிவீ தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி இணைய இணைப்பினை வழங்குதலே இச்சேவையின் நோக்கமாகும். இதேவேளை இச்சேவையில் பங்குகொள்ளும் ஒவ்வொரு பலூனும் 100 நாட்களில் பூமியை 3 தடவைகள் சுற்றிவருவதுடன் குறித்த பலூன்கள் எந்தவொரு காலநிலையையும் தாங்கும் வகையில் பொருத்தமான ஊடகத்தினால் உருவ ாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்த அப்பிளிக்கேஷன்களை கிளவுட் முறையில் சக மாணவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் வசதியும் உள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிராவின் மால்ஷேஜ் காட் ஸ்தலத்தின் முக்கியமான வரலாற்று சின்னமான ஹரிஷ்சந்திரகட் கோட்டை 6ஆம் நூற்றாண்டில் கலாசூரி பேரரசால் கட்டப்பட்டது.

1424 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ள இந்த கோட்டை சாகசப்பயணிகள்



விரும்பும் மலையேற்றத்துக்கான ஒரு அற்புதமான வாய்ப்பை தருகிறது.

இந்த அற்புதமான கோட்டையை நோக்கி மேலே ஏறும் பயணமானது சாகச 'த்ரில்' விரும்பிகளுக்கும் இயற்கை ஆர்வலர்களுக்கு மிகவும் பிடித்தமாக இருக்கும்.

இதன் அருகிலுள்ள ஹரிஷ்சந்திரகட் சிகரத்தை பயணிகள் தவறவிட்டுவிடக் கூடாது. இச்சிகரப்பகுதியிலிருந்து ஒரு நாணயத்தை நீங்கள் கீழ் நோக்கி வீசி எறிந்தால் அது புவியீர்ப்பு சக்தியை மீறி மேல் நோக்கி தள்ளப்பட்டு மிதந்து செல்லும் அதிசயத்தை பார்க்கலாம்.


இங்குள்ள புவியியல் அம்சங்களே இப்படி ஒரு அற்புதத்தை நிகழ்த்துகின்றன. அதாவது அரை வட்டப்பாறை அமைப்பும் கீழ் உள்ள பள்ளத்தாக்கில் நிலவும் அதிகபட்ச காற்றழுத்தச்சூழலும் இதற்கு காரணமாக சொல்லப்படுகிறது.

இந்த ஹரிஷ்சந்திரேஷ்வர் கோயிலுக்கு வலது புறமாக சென்றால் கேதாரேஷ்வர் குகை என்ற மிகப்பெரிய குகையை அடையலாம். இங்கு முழுவதுமாக நீரால் சூழப்பட்ட பெரிய சிவலங்கம் ஒன்று அமைந்திருக்கிறது.

5 அடி உயரமுள்ள இந்த லிங்கத்தை சுற்றி இடுப்பளவு நீர் சூழ்ந்துள்ளது. அதோடு இந்த நீர் மிகவும் குளிர்ச்சியாக இருப்பதால் இதை கடந்து லிங்கத்தை அடைவது சற்று கடினமானது. அதுமட்டுமல்லாமல் மிகப்பெரிய நீர் பிரவாகமே இங்கு ஓடும் என்பதால் மழைக்காலத்தில் இந்தக் குகையை அடைவது முடியாத காரியம்.

மேலும் சிவலிங்கத்தை சுற்றி நான்கு தூண்கள் அமையப்பெற்றுள்ளன. இந்தத் தூண்கள் சத்ய யுகம், த்ரேத யுகம், த்வாபர யுகம், கலியுகம் ஆகிய நான்கு யுகங்களை குறிப்பதாக சொல்லப்படுகிறது. ஒவ்வொரு யுகம் முடிவடையும் போதும் ஒவ்வொரு தூணாக இடிந்து விழும்.

அதன்படி தற்போது 3 தூண்கள் இடிந்துவிட்ட நிலையில் கலியுகத்தின் முடிவில் நான்காவது தூணும் இடிந்துவிடும் என்று நம்பப்படுகிறது. அந்த நாளில் இந்த உலகமும் அழிந்துவிடும் என்று ஒரு நம்பிக்கை நிலவுகிறது.



கண் சத்திரசிகிச்சை வைத்தியர்கள் பழுதடைந்த கண்களைச் சுகப்படுத்துவதற்கு மருத்துவ ரீதியாக இதுவரை பயனற்ற பொருளெனக் கருதிவந்த, தாயின் வயிற்றிலிருக்கும் கருவுக்கு ஊட்டம் கொடுக்கும் உறுப்பாகிய நச்சுக்கொடியை உபயோகிக்க ஆரம்பித்துள்ளனர்.

கனடாவில் இம்முயற்சியை ஆரம்பித்துள்ள 3 வைத்தியசாலைகளில் ரொறொன்ரோ கிழக்கு பொது வைத்தியசாலையும் ஒன்றாகும். கருப்பை மேற்புறத்திறப்பு சிகிச்சை மூலம் பிரசவம் இடம்பெறும் வைத்திய சாலைகளில் இருந்து சேகரிக்கப்படும் பிளசென்ராஸ் எனப்படும் இப்பொருளைக் கொண்டு அதே வைத்தியசாலையில் கடமையாற்றும் கண் சத்திரசிகிச்சை நிபுணர்களும், மாகாணத்தின் ஏனைய பகுதிகளிலுள்ள வைத்தியர்களும் பயன்படுத்தலாமென கருதப்படுகின்றது.

கண் சத்திர சிகிச்சை நிபுணர்கள் சிசுவைச் சுற்றி வளர்ந்திருக்கும் பனிக்குட உறையை பயன்படுத்தி பாதிக்கப்பட்ட கண்களை குணப்படுத்துவார்கள்.

ரொறொன்ரோ கிழக்கு பொது மருத்துவ நிலைய கண்மருத்துவ தலைமை வைத்தியர் ஞ்கூஷீ. சிலீணீகூஷீ ர்ஷீமீமீ கீமீபீரீமீ, இந்த உறை தோல் போன்றிருக்குமெனவும் சிறிய தளும்புடன் காயங்கள் விரைவாக குணமாகும் எனவும் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் இம்முறையால் கண்ணில் ஏற்படும் பலவிதமான காயங்களையும்



குணப்படுத்த முடியுமெனவும் இதனால் சத்திரசிகிச்சைக்கு ஒரு புதிய வழி கிடைத்துள்ளதென்றும் சொல்லியுள்ளார்.

நன்கொடையாக கிடைக்கும் ஒரு பிளசென்ரா மூலம் கிட்டத்தட்ட 36 கண் நோயாளிகளுக்கு உதவலாமெனவும் கூறப்படுகின்றது. அதிகமான தாய் மார்கள் நன்கொடை செய்ய முன்வந்திருப்பதாகவும் பேசப்படுகின்றது.



ஆயிரம் பேருடன் உலகைச் சுற்றிவரும் கப்பல். பாடசாலைகள், வைத்திய சாலைகள், விமான நிலையம், ஆடம்பர விடுதிகள், பூங்காக்கள் ஆகிய வற்றுடன் 50 ஆயிரம் பேர் பயணிக்கக் கூடிய இராட்சதக் கப்பல் அமெரிக்காவிலிருந்து உலகத்தைச் சுற்றிவரத் தயாராகவுள்ளது. Freedom Ship என்ற பெயருடைய இந்தக் கப்பல் மிதக்கும் உலகம் என அழைக்கப்படுகிறது. அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தைச் சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்றினால் ஆடம்பர வர்க்கத்தினருக்காக இவ்வாறான தொரு கப்பல் தயாரிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவிலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்து உலகத்தை சுற்றி வரவுள்ளதாக Freedom Ship இன் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் 25 அடுக்கு மாடிகள் உண்டு. இங்கு குடியிருக்கும் 50 ஆயிரம் பேருக்கு மேலதிகமாக 30 ஆயிரம் விருந்தினர்கள் பயணிக்கக் கூடிய வாய்ப்பையும் கப்பல் வழங்கு கிறது. கப்பல் உருவாக்கப் பட்டுள்ள விதம் குறித்தான வரைபடத்தை குறித்த நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதன்பிறகு கப்பலில் உலகத்தைச் சுற்றிவர பதிவு செய்வோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



துவைக்காமல், இஸ்திரி போடாமல் தொடர்ந்து 100 நாட்கள் உபயோகப்படுத்தக்கூடிய விதத்தில் ஒரு சட்டையை அமெரிக்காவின் உல்-பிரின்ஸ் என்ற நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

உல்லன் நூல் கலந்த துணிகள் கசங்காது, வியர்வை வாடையை வெளியிடாத தன்மை கொண்டது. காட்டனைவிட ஆறு மடங்கு உழைக்கக்கூடியது என்பதால் இந்த வகைத் துணியில் நவீன காலத்திற்கு ஏற்ப ஆழ்நீலகலரில் சிறிய கட்டங்கள் கொண்ட சட்டையை வெளியிட்டுள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது

இதனை அணிந்து பார்த்த நபர்கள் கூறுகையில், நாங்கள் எப்படி உபயோகித்தாலும் சட்டைகள் புதிது போலவே இருக்கின்றன என்று தெரிவித்துள்ளனர்.

மேலும் எல்லோரும் விரும்பும் விதத்திலும், எப்போதும் அணியக் கூடிய வடிவத்திலும், சாதாரண விலைமதிப்பிலும் இந்த சட்டைகளை உருவாக்கியுள்ளதாக அந்த நிறுவனம் தங்களது இணையதளத்தில் தகவல் வெளியிட்டுள்ளது.




அமெரிக்காவில் மக்கள் மனம் கவரும் வகையில் மிக உயரமான ரோலர் கோ ஸ்டர் ஒன்று அமை க்கப்படவுள்ளது.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் ஆர்லாண்டோ (Orlando's) என்ற தீம்பார்க்கில், சுமார் 520 அடி உயரத்தில் ரோலர் கோஸ்டர் கட்டப்படவுள்ளது. Polercoaster என்று பெயரிடப் பட்டுள்ள நிலையில், 2016ம் ஆண்டு வசந்த காலத்திற்கு முன்பாக கட்டி முடிக்கப்படும் எனவும், இதனை அமைக்க 60 மில்லியன் டொலர்கள் செலவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிவேகமாக செல்லும் இந்த கோஸ்டரில், கோபுரத்தின் உச்சியில் உணவகங்களும் அமைக்கப்பட உள்ளது.

இதில் ஒரேநேரத்தில் 850 முதல் 1600 பயணிகள் வரை செல்லமுடியும். பயணம் செய்ய இயலாத நபர்கள் கோபுரத்தில் இருந்து கொண்டு அழகை ரசிக்க முடியும், இதற்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளது.

தற்போது நியூஜெர்சியில் 456 அடி உயரத்தில் மிக பிரமாண்டமாக நிற்கும் Kingda Ka rude at Six Flags என்ற கோஸ்டரின் சாதனையை முறியடித்துவிடும்.

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் புதிய நிர்வாகிகள்

**72 ஆண்டுகால வரலாற்றினைக் கொண்ட கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 29-12-2013 அன்று நடைபெற்றது. சுமார் 300 உறுப்பினர்கள் வரை சமூககமளித்து, சங்கத்தின் புதிய நிர்வாகிகளை இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்துள்ளனர்.**



தலைவர்:
திரு.ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன்
(முன்னாள் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலார்)



பொதுச் செயலாளர்:
தமிழ்த்தென்றல் கலாபூஷனம்
தம்பு. சிவசுப்பிரமணியம்
(தம்பு சிவா)



நிதிச் செயலாளர்:
திரு.சி.சிவலோகநாதன்
(கணக்காய்வாளர்)



துணைத்தலைவர் (முதன்மை)
கலாநிதி மு.கதிர்காமநாதன்
(முன்னாள் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவரும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொதுச்செயலாளரும்)

## வாழ்த்துகின்றோம்

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்ட அனைவரையும் தமிழினி பத்திரிகை வாழ்த்தி வரவேற்கின்றது. அனுபவமும் ஆற்றலும் கொண்ட புதிய நிர்வாகத்தினர் புலம் பெயர் தமிழர்களோடு தொடர்பு கொண்டு இன்னும் பல அரிய தமிழ்ப் பணிகளை குறிப்பாக வட கிழக்கு, மலையகத் தமிழ் மாணவர்களின் கல்விப் பணிக்கு ஆற்ற முன் வர வேண்டும். நமது பத்திரிகையின் துணை ஆசிரியர் பொதுச் செயலாளராக அமோக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளமை எமக்கு இரட்டிப்பு மகிழ்வை அளிக்கிறது

*ஆசிரியர்*

## பலாத்காரம்: பொலிசார் கைது



பஞ்சாப் மாநிலம் சண்டிகரில் கடந்த வாரம் பள்ளிக்கு சென்ற 17 வயது பெண்னை 5 போலீஸ்காரர்கள் போலீஸ் கண்ட்ரோல் ரூம் வேனில் கடத்தினர். அந்த பெண்ணை துப்பாக்கி முனையில் 5 போலீஸ்காரர்களும் சேர்ந்து மாறி மாறி பலாத்காரம் செய்தனர். மயங்கிய நிலையில் சாலையில் கிடந்த அவரை மீட்டு சிலர் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். இச்சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்நிலையில் இந்த சம்பவத்தில் தொடர்புடைய 5 போலீஸ்காரர்களையும் சண்டிகர் போலீசார் கைது செய்துள்ளனர். கைது செய்ய சென்றபோது பலாத்காரத்தில் தொடர்புடைய 5 போலீஸ்கார்களையும் பொதுமக்கள் கடுமையாக தாக்கினர். அவர்களை கடுமையாக தண்டிக்க வேண்டும் என்று பொதுமக்கள் ஆவேச குரல் எழுப்பினர். பொதுமக்களிடம் இருந்து மீட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.




ஆசை அண்ணாவின் அன்புக்கனவுகள்

DREAMS OF BEST BROTHERS

அன்பான அவசர வேண்டுகோள்!

எமது தேசத்தில் எமது அமைப்பினால் பராமரிக்கப்படுகின்ற சிறுவர் சிறுமிகளுக்கு தங்களிடம் நல்ல நிலைமையிலுள்ள சிறுவர் சிறுமிகளின் ஆடைகளை தந்துதவுமாறு அன்பாக கேட்டுக்கொள்கிறோம்

தாங்கள் கீழ்வரும் விலாசத்தில் கொடுத்துதவுமாறு பணிவாக கேட்டுக்கொள்கிறோம்

"Selvaraja Gold House & Textiles"
162 - B Mitcham Road,
Tooting, SW17 9NJ

AJ BROTHERS FURNITURE
325A London Road,
Mitcham Surrey CR44BE

Subash Saloon
2 Latch Lane
Mitcham Surrey
CR 4 2JA

Common Cars
67-69 Sutton Common Road,
Sutton Surrey, SMI3 HN

" Mierra Jewelery Maart
34, London Road, Tooting,
SW17 9HP





மேலதிக தொடர்புகளுக்கு
Facebook - The dreams of best brothers
Email : thedreamsofbestbrothers@gmail.com

Lebara




## இலங்கையில்

# 100,000

## சிறுவர்களுக்கான லிபராவின் உதவித்திட்டம் - 2014

லிபரா அறக்கட்டளை இதுவரை €1,000,000வை உதவித்திட்டங்களிற்கு வழங்கியிருப்பதுடன், இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட 30,000ற்கும் மேற்பட்ட தமிழ்ச் சிறுவர்களுக்கு உதவிகளை வழங்கியிருக்கின்றது. 2010ஆம் ஆண்டு முதல் கல்வி, சுகாதாரம், வீட்டுத்திட்டம் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எங்கள் பணியை விரிவாக்க உங்கள் உதவி தேவைப்படுகின்றது.

**நீங்கள் செய்யவேண்டியது!**

நீங்கள் செய்யும் **€10*** அல்லது அதற்கு மேலான **Top Up** தொகைக்கு நாங்கள் **€1** ஐ எமது உதவித் திட்டத்திற்கு வழங்குவோம். இதில் பங்குபற்ற,

**ED** - கல்வி
**HC** - சுகாதாரம்
**OR** - விதவைகள் / சிறுவர்களுக்கான பராமரிப்புகள்

என்ற தலைப்புகளை குறிகாட்டும் ஆங்கில எழுத்துக்களை எமக்கு **SMS** மூலம் **34001** என்ற எண்ணுக்கு அனுப்புங்கள்.

நீங்கள் **Top Up** செய்யும்போது லிபராவே அன்பளிப்புத் தொகையை வழங்கும். உங்களது நிலுவையில் இருந்து கழிக்கப்பட மாட்டாது.

lebara.com

Always by your side

*கட்டண வரையறை, பாவனைக்கட்டுப்பாடுகளுக்கு lebara.com என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும்.